
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-page-53-

| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 2<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ஞு வைகாசி மீ<br>மே—ஜூன் '57 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |

18582



புனித சைவம் உலகிற்குப் புலனுக, மதுரை வைகையில்
ஏடு எதிரேற விட்ட திருஞான சம்பந்தர்.

பெரியபுராணச் சித்திர விளக்கம் 38 பக்கம் 53

54

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. திருப்புகழ்ப் பலம் | (திருப்புகழ் மணி) | ... | 49 |
| 2. கனலும் புனலும் கண்ட தமிழ் | (கி. வா. ஜ.) | .... | 53 |
| 3. ஏகவீரத் தம்பதிகள் | (ஸ்ரீ ரஸபதி) | ... | 55 |
| 4. சிவகிரி எது? | (சிவக்கவிமணி C. K. சுப்ரமணிய முதலியார்) | ... | 65 |
| 5. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) | ... | 67 |
| 6. அஹிம்ஸா புருஷர்கள் | (அ. கி. ரங்கராஜன்) | ... | 70 |
| 7. மனிதன் எவன்? | (ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி) | ... | 78 |
| 8. திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) | ... | 83 |
| 9. உண்ணுமல் நோய் தீர்க்கும் ஒரு தனி மருந்து | (வா. ராமலிங்கம் | ... | 92 |
| 10. Gratitude | *(Thiruppugal Mani)* | ... | 95 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள் போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர். சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

| மலர் 9 | ஹேவிளம்பி ஞு வைகாசி மீ<br>மே - ஜூன்—57 | இதழ் 2 |
| --- | --- | --- |


# திருப்புகழ்ப் பலம்

(திருப்புகழ்மணி)

"பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
 பயனு மிப்படிப்—பல வாழ்வும்
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
 பரவு கற்பகத்—தருவாழ்வும்;
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
 பொலியு மற்புதப்—பெருவாழ்வும்
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
 புகழ்ப லத்தினைத்—தரவேணும்."

—திருப்புகழ்

புராண கதைகளிலே, ஒரு கதை அருமையான தத்வ மொன்றை விளக்குகின்றது. வசிஷ்ட மஹரிஷி தவமே தமது ஆஸ்ரமமாகக் கொண்டு, வேண்டுவன வெல்லாம் தரும் காமதேனு வெனும் தெய்வீகப் பசுவையும் பெற்று, அரண்யத்தில் வசித்து வந்தாராம். விஸ்வாமித்திரர் காட்டுக்குச் சென்று க்ஷத்ரிய குல

---

நெடும்பிறவி ஆழியின்மேல் நீர்க்குமிழி போலப்
படும்கவலை தீரக்கண் பாராய் சதாசிவமே

தர்மத்தை நாடி வேட்டை யாடிக் களைத்து, வசிஷ்டர் ஆஸ்ரமத்தில் நுழைந்தனராம். வசிஷ்டர் அவரை உபசரித்து வேண்டுவன வெல்லாம் காமதேனுவிடம் உடனுக்குடனே பெற்று விஸ்வாமித்ரருக்குக் கொடுத் தனர். இதைக் கண்ட விஸ்வாமித்ரர் அந்தக் காம தேனுவையே தானமாக இச்சித்தார். அதைக் கொடுக்க முடியாதென்றும், வாங்குவதற்குக்கூட விஸ்வாமித்ர ருக்கு யோக்யதை இல்லை யென்றும் சொல்லி விட்டார். இது விஷயமாகப் பெரும்போர் ஏற்பட்டு விட்டது. விஸ்வாமித்ரர் தவஞ்செய்து அநேகவிதமான ஆயுதங் களையும் அஸ்த்ரங்களையும் பெற்ற போர் வீரர். க்ஷத்ரிய குல திலகம். வசிஷ்டர் சிஷ்டாசார தபோதனர். உல கெலாம் பிரம்மம் என்று கருதும் பிரம்மரிஷி. காயத்ரி மந்த்ர ஜோதி பூர்வமான தெய்வ பலம் பெற்றவர். விஸ்வாமித்ரரோ, ராணுவ பலம் பெற்றவர். போருக் குத் தொடங்கி விட்ட விஸ்வாமித்திரர் வில்லுங் கையு மாய், அஸ்திரங்களை கணக்கற்றனவாய்ச் சரமழை பொழிகின்றார். மந்த்ர பலத்தின் உருவான வசிஷ் டர், தமது தண்டத்தை முன் நிறுத்தி, அதற்குப் பின் னால் தவ நிஷ்டையில் ஆசனம் போட்டுக் கொண்டு, உலகெலாம் நிறைந்து நிற்கும் ப்ரம்மத்தைத் தியானித்து உட்கார்ந்து விட்டார். ப்ரம்ம பலம் அவர் பக்கம் வந்து அவரைச் சூழ்ந்து கொண்டு விட்டது. விஸ்வாமித்ரர் ஆயுதங்களெல்லாம் வசிஷ்டரின் தண் டத்தைத் தாண்டி வரமுடியாமல், தண்டத்தின் அடியில் வீழ்ந்தன. தோல்வியடைந்த விஸ்வாமித்ரருக்குக் கருணையால் உபதேசித்து, வசிஷ்டர் சொன்னது ஒன்று உண்டு. அதென்ன? பலம் பலம் என்பது ராணுவ பலமன்று. தேக பலம் அன்று. குண்டுகள் பலமன்று. தன பலமன்று. பலம் என்பது ப்ரம்ம பலம். தேஜோ பலம். தவத்தின் பலம். பக்தியின்

---

பொல்லார் உறவகன்று பொய்யகன்று மெய்சார்ந்த
நல்லாரைச் சேரவரம் நல்காய் சதாசிவமே

பலம். இவ்வாருகத் தெரிவித்ததும், விஸ்வாமித்திரர், தவமியற்றி, பிறகு ப்ரம்மரிஷி என்று வசிஷ்டரிடமே பட்டம் பெற்ருராம். ஒரு பெரிய தத்வத்தின் பொருளை இந்தக் கதை விளக்குகின்றது.

இந்தப் பலத்தைப் பெறுவதே பிறப்பின் பயன். ஆதலின் அதை அடைவதற்கு என்ன வழி? தவத்தின் வழியைக் கலியுகத்தில், இக்காலத்தில், அடைவது எப்படி? அநேக வழிகளில், திருப்புகழ்த் தவ வழி மிகவும் சுலபமானது. எளிதாய் இயற்றக் கூடியது. நிச்சயமாய்ப் பலன் கொடுக்கக் கூடியது. அதை அருணகிரி உபதேசிக்கின்ருர். "ஆனபய பத்தி வழி பாடு பெறு முத்தி அதுவாக நிகழ் பக்த ஜன வாரக் காரன்" என்று முருகனை வேளைக்காரனுக வகுத்தார். பக்தி வழிபாடு இந்த ப்ரம்ம தேஜோ பலத்தைக் கொடுக்குமாம். இதுதான் திருப்புகழ்ப் பலமாம். முருகன் யார்? கிரிராஜ தீபமங்கள ஜோதி. ஜகத்திற் ஜோதிப் பெருமாள். அவனே உலகெலாம் நிறைந்த ப்ரம்மம். அந்த ப்ரம்மத்தை முருகனுக கருத்தினில் கொண்டு வழிபடும் அடியாரிடம் ப்ரம்ம ஜோதி பலம் விளையாடும். இந்தப் பலம் சரீரத்தை வந்து ஒட்டியதல்ல. ஆத்மாவிடமிருந்து தெய்வ வன்மை வாய்ந்த ஓர் பண்பு. உள்ளிலிருந்து வெளிவந்து பக்தரைக் காக்கும் பலம்.

"சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை யறுத்தெறிய உறுக்கியெழும்; அறத்தை நிலை காணும்" என்றும், "துதிக்கு மடியவர்க் கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர் குலத்தை முதல் அறக் களையும் எனக்கொர் துணையாகும்" என்றும், "திருத் தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தனென துளத்திலுறை கருத்தன் மயினடத்து குகன் வேலே" என்றும் பாடினர்.

---

இம்மையில்காண் எப்பொருளும் நின்சொருபம் என்றுணர
செம்மைபெறு நல்லருளைச் செய்யாய் சதாசிவமே

இந்த முருகன்—ப்ரம்மம். அவன் வேல் சக்தி களெல்லாம் ஆகும் ப்ரம்ம சக்தி. எல்லா சக்தியும் எந்த சிவத்தில் அடங்குவதோ அந்த சிவன் ப்ரம்மம் அதன் பலம்தான் பலம் ப்ரம்ம ஜோதி பலமென் றும் தேஜோ பலமென்றும் புராணக் கதை சொல்லிய தென்று உணர்தல் வேண்டும். அதன் பலத்தை விவரமாக யார்க்கும் தெரிவிக்கின்றார் அருணகிரி. "சினத்தவரை முடித்துவிடும். பகைத்தவரைக் குடிக்கும். "சினத்தையும் பகையையும் (கோப க்ரோதங்களையும்) போக்கி அவரை நல்வழியில் ஏற்றும். விஸ்வாமித் திரர் ராணுவ பலத்தை யொழித்து அவரை ப்ரம்மரிஷி யாக்கி விட்ட பலம். சூரபத்மனை இரு கூறுக்கி சேவலும் மயிலுமாக்கி ஆண்ட கருணை பலம் போலும். அகங் காரத்தைப் போக்கிடும் நெருப்பாம். அக்னியை எரித்த சீதையின் தவ பலத்தை யொத்தது. நெருப்பையும் எரிக்கும். 'சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும் திருப்புகழ் நெருப்பு' என்றூர். 'நினைத்ததும் அளிக் கும், மனத்தையும் உருக்கும், பிறவாமல் நிசிக் கரு வறுக்கும்'. இந்த வரங்களைக் கொடுப்பது என்னவென் ருல், "திருப்புகழ் ஜோதி பலம்" ஜோதியென்பது பலம். அதை யுணர்வது "சிவம்." அதுவே "ஹம்ஸஸ்ஸோகம் ஹம்ஸஸ்ஸோகம் ஹம்ஸோகம்". "ஜோதி உணர்கின்ற வாழ்வு சிவமென்ற ஸோகமது தந்து எனையாள்வாய்" என்று அருணகிரி பாடினர். தேவர் வடிவும், சுத்த மனமும் (சித்தசுத்தி என்பார் கள்) தனமும்-ஆண்டவனைப் பாடி, பாட்டின் பொருளை உணர்த்திப் பின்னும் பாடுவோர் செல்வர். அந்தத் தனமும், (தருமமாம்) குணமும்-தெய்வீகப் பண்பும்- (பக்தியெனும் மனைவி இல்லறம் நடத்துவாளாம்.) குலமும்-பகவத் குடும்பம், ஜகத் குடும்பம்-உலகனைத் தும் ஒரே குடும்பம், ஒரே குலம் எனும் உணர்ச்சி

---

புழுவாய்க் கருவில் புரண்டிருந்த என்னை
எழுமுருவாய்ச் செய்தஅருள் என்னே சதாசிவமே

தரும் இவ்வித நன்மைகளைத் தன் சூழ்நிலையாய் வைத்தருள்வது திருப்புகழ்ப் பலம்.

---

# கனலும் புனலும் கண்ட தமிழ்

(கி. வா. ஜகந்நாதன்)

பாண்டியன் மனங் கசிந்து சம்பந்தப்பிரானைச் சார்ந்து சிற்பதைக் கண்டு சமணர்கள் அஞ்சினார்கள். இனி எந்த வகையில் அவரை வெல்வதென்று ஆராய்ந்து கனல் வாதம் புனல் வாதங்களால் வெல்லலாம் என்று துணிந்தனர். ஞானசம்பந்தர், "இனி உங்களுடைய கொள்கைகளைச் சொல்லுங்கள்" என்று கூற, "தர்க்க வாதம் செய்தால் விடை கூறுவாருடைய ஆற்றல் வெற்றி பெறும். அதை யன்றிக் கண்கூடாக ஏதேனும் செய்து காட்ட வேண்டும்" என்றார்கள். உடனே மன்னன், "என்னை வெப்பு நோய் அடர்ந்தபோது அதைப் போக்கமாட்டாமல் நின்றீர்கள். இனி என்ன வாதம் உமக்கு உள்ளது?" என்று கேட்டான். அருகர், "தங்கள் கொள்கையைச் சொல்லும் வாசகங்களை எழுதி நெருப்பில் இட்டால், எந்த ஏடு வேவ தில்லையோ, அந்த ஏடுடையாருக்கே வெற்றி ஆகும்" என்றனர்., சம்பந்தர் அதற்கு இசைந்தார்.

உடனே மன்னன் முன்பு தீ உண்டாக்கினர். சம்பந்தப் பெருமான் தம்மிடமிருந்த தம் பதிக ஏட்டைப் பிரித்த போது, "போகமார்த்த" எனத் தொடங்கும் திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. அந்த ஏட்டைச் சுவடியிலிருந்து தனியே எடுத்து, "தளிரிள வளரொளி" என்ற பதிகத்தைப் பாடி அந்த ஏட்டைக் கனலில் இட்டார். தீயினில் அது எரியாமல் பொலிவு பெற்று விளங்கியது. சமணர் தம் மந்திரம் ஒன்றை ஏட்டில் எழுதித் தீயிலிட அது வெந்து கருகியது.

பின்பு நீர் கொண்டு தீயை அவித்துச் சம்பந்தப் பெருமான் இட்ட ஏட்டை எடுத்தார்கள். அதை யாவர்க்கும்

---

காட்டி பின் மீட்டும் அப்பெருமான் தம் சுவடியிலே சேர்த்துக் கொண்டார். அருகர் கையினுல் சாம்பரை எடுத்துப் பார்த்தார்கள். ஏட்டின் ஒரு துணுக்கேனும் அதில் இல்லை.

"இப்போது என்ன சொல்கிறீர்கள்?" என்று அரசன் கேட்டான்.

"இரண்டு முறை வாதம் ஆயிற்று. எதையும் மூன்று முறை செய்வது மரபு. இனிப் புனல் வாதத்தை மூன்றும் முறையாகச் செய்வோம்" என்று அருகர் கூறினர். சம்பந்தர் அதற்கும் இசையவே, குலச்சிறையார் இடையிட்டு, "இந்த வாதத்தில் தோற்றவர் இன்னது செய்வது என்று வரையறை செய்யவேண்டும்" என்ருர்.

அது கேட்ட சமணர் கோபம் கொண்டு, "நாங்கள் இந்த வாதில் தோற்ருேமாளுல் அரசன் எங்களைக் கழுவில் ஏற்றட்டும்" என்று கூறிஞர்கள். "உங்கள் நிலையை மறந்து கோபத்தால் இப்படிச் சொல்கிறீர்களே!" என்று மன்னன் கூறிஞன்.

அப்பால் மன்னனும் பிறரும் வையை யாற்றை யடைந்தனர். மன்னவன், "ஏடுகளை இடுக" என்று சொல்லச் சைனர்கள் முந்திக்கொண்டு தம் ஏட்டை இட்டனர். அது வையை நீரோட்டத்தோடு சென்று விட்டது.

சம்பந்தப் பெருமான், "வாழ்க அந்தணர்" எனவரும் திருப்பதிகம் பாடி அதனை ஏட்டில் எழுதி வையைப் புனலில் இட்டார். அது மிக்க விரைவாக நீரை எதிர்த்துச் செல்லலாயிற்று. அதனைக் கண்டு யாவரும் அதிசயித்தார்கள். அதனை எடுக்கும் பொருட்டுக் குலச்சிறையார் குதிரையின்மீது ஏறிக்கொண்டு சென்ருர். அப்போது ஞானசம்பந்தர் திருவேடகப் பெருமானை ஒரு பதிகத்தால் பாட அவ்வேடு திருவேடகத்தருகே நிற்கக் கண்ட அமைச்சர் அதை எடுத்துக் கொண்டார். அதை மீட்டும் ஞானசம்பந்தப் பெருமானிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

ஏடு நீரில் எதிரேறிய காட்சியைக் கண்டு வியக்கும் போது பாண்டிய மன்னனுடைய கூன் நிமிர்ந்துவிட்டது.

---

தபஜபங்கள் செய்தே தலம்பலவும் சென்றஎன(து)
அபயகுரல் நீயறிதி ஐயா சதாசிவமே

அதற்கு முன் கூன் பாண்டியனாக இருந்த அவன் அன்று முதல் நின்றசீர் நெடுமாறனானன்.

சமணர்கள் தாம் தோல்வியுற்றது கண்டு தம் வாக்குப் பிறழாமல் கழுவேறி உயிர் விட்டனர். மதுரை மாநகரும் பாண்டி நாடும் சைவ நெறியிலே ஈடுபடலாயின. சம்பந்தப் பெருமான் புகழ் எங்கும் பரவியது,

சம்பந்தர் மதுரையில் தங்கி ஆலவாய் இறைவனைப் பல பதிகங்களால் பாராட்டி இன்புற்றார்.

ஸ்ரீ தேவிதாஸர்கள் 14

# ஏகவீரத் தம்பதிகள்

## (ஸ்ரீரஸபதி)

நிலவு எங்கும் நிழலிடுகின்றது. குலை குலையாக, கனிகள் சோலையில் குலுங்குகின்றன. மலர்கள இன்ப மணம் செய்கின்றன. வண்டுகளின் கானத்தால், மகிழ்கிறது மனம்.

ஆஹா! ஐம்புல இன்பம்இதுதானோமதலஸா! எல்லையில்லாமல் உதவுகிறது இயற்கை. இவைகளை ஏற்பார்க்கு, வாழ்க்கை முழுதும் இன்பமயம்.

ஆம் ஸ்வாமி! இயற்கையின் அருளால், கைக்கு வருவது கசக்கிறது. எட்டாதது இனிக்கிறது. வெறிகொண்டு அதைப்பெற விரைகின்றார் மக்கள். அதனால்தான், அளவிலாத வேதனைகளை அடைகின்றனர்.

உண்மைதான். மதலஸா! இனிய மணம் எழுகிறதே! உன் கூந்தலில் உள்ள மலர் என்ன மலர்?

அதுவா! அது தங்கள் பெயர்கொண்ட அருமை மலர்.

ஓ! சம்பங்கியும் சண்பகமுமா! என்று நகைத்தான் சம்பகன்.

* * *

உம் ஆ...ம்ஆ...உம்ஆ... ஆ!

என்ன அது? குழந்தை அழும்குரல்! அதுவும் யாரும் அற்ற காட்டில், அடடா!

ஒலி வந்த திசை நோக்கி, தம்பதிகள் ஓடினர். மலர்கள் உதிர்ந்த மரத்தடியில், கை கால்களை ஆட்டி அசைத்து, அழுகிறது

---

காந்தம் ஊசிதனைக் கண்டீர்க்கும் காட்சியென
நேர்ந்தளனை யீர்த்தல் நியதி சதாசிவமே

ஒரு சேய். என்ன அருமையான அழகு! பார்த்துக் கொண்டே இருந்தாலும், பசி தீரும்போல் அல்லவா இருக்கிறது!

இதை இங்கு இட்டவர்கள் யார்? ஓ அம்மா! ஏ ஐயா! இந்தக் குழந்தையை யிட்டு எங்கே போயிருக்கிறீர்கள்?

ஆர்வத்தோடு நெடுநேரம் கூவி அழைத்தனர். தொண்டை வரண்டதுதான் கண்ட பலன்.

மதலாஸா! இன்பம் செய் மக்கள், நமக்கு இல்லே. இது அம்பிகை அருளால் அகப்பட்டது என்று, எண்ணுகிறது என் மனம். என்ன சொல்கிறாய்?

வாரி எடுத்த மதாலஸை, மார்புறத் தழுவி, மகவிற்கு வாய் முத்தம் தந்தாள். புனித தம்பதிகள், சேயுடன் புறப்பட்டனர்.

போகாதே, நில்! இவன், மன்னா மாளிகையில் வளர வந்தவன்! அரிய பயனே, இவனால் உலகம் அடைய இருக்கிறது!

அசரீரி கேட்டு, அதிர்ந்தது மனம். எடுத்த இடத்தில் சேயைக் கிடத்தினர். குவா குவா என்று, மேலும் குமுறி யழுதது குழந்தை.

மதாலஸையின் மனம் மயங்கியது. கண்கள நீரைச் சிந்தின.

மதாலஸா! என்ன இது? இவ்வளவு விரைவில் இப்படியும் ஒரு பந்தமா? சீச்சீ! மறந்துவிடு இம்மகவை!

ஸ்வாமி! யாருமற்ற காட்டில், எப்படி இவனைவிட்டுப் பிரிவது?

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை! இயற்கையின் அருளே, இப்படிப்பட்ட இடத்தில்தான், நாம் எண்ண வேண்டும். வா! வா என்று, அவளைச் சம்பகம் வலிந்தீர்த்துச் சென்றான்.

குழந்தையின் குரல், காடுமுழுவதும் எதிரொலித்தது.

திடு திடுஎன்று அதிர்கிறது பூமி. ஏன் அப்படி? ஓ! விரைந்து வருகிறது ஒரு தேர். அந்த அதிர்ச்சியால், மேலும் வீரிட்டு அழுதது மகவு.

அவ் ஓசை கேட்டு, துர்வசு வேந்தர், தேரை நிறுத்தினர். நாற்புறமும் கூர்ந்து நோக்கினர். தேரைவிட்டு குதித்தார். மகவைக் கண்டார். வானம் நோக்கினர்.

தேவ தேவி! வகர வடிவி உமா தேவி! மகப்பேறு இல்லேயே என்று, மனம் கலங்கினேன். கனவில் வந்தாய்! காட்டில் ஒரு பிள்ளை; உனக்காக காததிருக்கிறது; போ! போ! கொண்டு வா என்று குறிப்பிட்டாய். பார்ப்போமே என்று, எவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வந்தேன். ஆரணீ! எதற்கும் மூல காரணீ! உன் அருளே அருள் என்று, கண் மழை சிந்திக் களித்தார்.

---

பத்தர் தொடர்பால் பரமஅருள் யான்எண்ணி
சித்தம் மயக்கமறச் செய்யாய் சதாசிவமே

மகவை வாரியெடுத்தார். முத்தம் தந்தார். தேர்மேல் ஏறினர். கட்டை விரலை, வாயில் வைத்துச் சுவைக்கும் அழகைக் கண்டார்.

பிள்ளைக் கலி தீர்க்க வந்த பெருமா! என் கண்ணே! கதி இல்லையா என்று, ஏங்கும் என் கதறல் தவிர்த்தாய்! பிள்ளைகள், கர்மத்தால் பிறப்பார்கள்; நீ புதையல் எடுத்த தனம்! அருளால் கிடைத்த அருமைச் செல்வம்! என்றுபாடி மகிழ்ந்து பாராட்டினர்.

நகரை யடைந்தார். மந்திரி பிரதானியர் வரவேற்க, மாளிகை யுள் புகுந்தார். அந்தப்புரத்தை அடைந்தார்.

ஓடி வந்தாள் மகாராணி. மன்னர் பெருமா! ஏது இந்தக் குழந்தை?

தேவி! ககன வடிவி கனவில் அருளினள். அதன்படியே, நனவில் கிடைத்தது இந் நல்மகவு என்று, குதூகலத்தோடு கூறினர். பெற்ற மகவுபோல், அரசி பெரிது மகிழ்ந்தாள்.

தானம் பல செய்தனர். கை ரேகையைக் கொண்டு, ஜாத காமம், நாமகரணம் முதலிய கடந்தன. இன்றுமுதல் இவன் பெயர், ஏகவீரன் என்றனர்.

ஆறுவது மாதத்தில், அன்னப் பிராசனம். மூன்றுவது ஆண்டில், சூடா கரணம், பதினோராம் வயதில், உபநயனம், வேத அதய யனம்; இப்படி வாழும் வகையில் இருநதது வளர்ச்சி.

ஏகவீரனிடத்தில், வித்தையும் திறலும் விளைந்தது கண்டு, வேந்தர் உள்ளம் நெகிழ்ந்தது. பருவம் வந்தது. பாலன் நெற்றியில் பட்டம் கட்டினர். அரச பாரத்தை அவன்பால் ஆக்கினர். அதன் பின் அரசர், தவம் செய்ய வனம சென்றா. ஆம். அதுதான் மனித அறம், இது, நலம் சிறந்த சுருதி நடை; அமைதிக்கு வழி.

உலகம் மகிழ, அருளாட்சி நடத்தும் ஏகவீரரை, கனிவொடு முனிவர் பலர் கண்டனர். விநயம் காட்டிய அவரிடத்தில், ஆர்வம் கொண்டு ஆசிசெய்தனர்.

மன்னு! "பிரமன் படைப்பும், திருமால் காப்பும், உருத்திரன அழிப்பும், நலம் சிறந்த மாதேவியால் நடைபெறுகின்றன. துஷ்டி, பிரபுத்வம், புத்தி, உமை, ரமை, வித்யை க்ஷமை, காந்தி, மேதை என்று ஏதயிலாத வேதம், அம்பிகையை இறைஞ்சுகின்றது. மங்களை யான அத்தேவியை, சிவசக்தி என்று அழைத்து, உடல் சிலிர்க் கின்றுர் மாதவர். அன்புடன் அவள் திருவடிகளை ஆராதித்தால், வாராத செல்வம் கைக்கு வரும்; மறுமையின் இன்பம் மலியும்; வீடும் கூடும்"

---

நின்னருள்செல் வந்தர்களாம் நேர்மை யடியவர்கள்
பொன்னடியென் சென்னிமிசை பூண்பேன் சதாசிவமே

. தேவ தேவியின் திருவருள் ஆக்கத்தை, இப்படி விரித்து மேலோர் விளம்ப லாயினர். கேட்கக் கேட்க, ஏகவீரர் புளகிதம் எய்தினர்.

சிவ விஷ்ணு அம்சம் ஆனவர் தத்தாத்ரேயர். அவர் அடுத்த வனத்தில் அருந்தவம் செய்கிறுர். அதை ஏகவீரர் அறிந்தார். சென்றுர். அவரைச் சேவித்தார். பலகாலம் வேண்டியதன் பய ஞக, அவர் பராசக்தி மந்திரத்தை அருளினுர். உரிய முறைகளையும் உபதேசித்தார். அதன்பின் செய்தி என்ன?

காலை யெழுதல். கடன் முடித்தல். நீராடி அனுட்டித்தல். பூஜை யறையுள் புகுதல். வாமையை மகிழந்து வழிபடுதல்.

தொன்மை உலகங்களைத் தோற்றுவிக்கும் தாயே! ஐம்பூத வடிவீ! எதற்கும் ஆதார பூதம் ஆனவளே! உயிர்க்கு உயிராளுய்! விளையும் பயிரில் வித்தாளுய்! பராபரீ! கண்பார் தாயே! என்று ஏத்திப் போற்றி யிருந்தார்.

பிறகு அரசியல் சிந்தனை. அச்சமயத்தும், எம்பெருமாட்டியை இதயத்தில் எண்ணுவர்; புனிதமான இதுவே, ஏகவீரருடைய பொழுது போக்கு!

* * *

வளம் என்றொரு நகர். அதன் அரசர் பெயர் ரைப்யர். மகப் பேறு கருதிய அவர், மனைவி ருக்மரேகையுடன், சிறக்க புத்திர காமேஷ்டி யாகத்தைச் செய்தார். ஏராளமான நெய்யை, ஓமத் தீயில் இட்டார். அதன் பயனுக, ஸ்ரீதேவியின் அருளால், உதித்தது ஒரு பெண் மகவு. ஏகாவலி என்று பெயர் சூட்டினர்.

மகளை, மன்னர் மகிழ்ந்து வளர்த்தார். வளர்ந்த வனிதை, பருவம் அடைந்தாள். மந்திரியின் மகள் யசோதை, ஏகாவலியின் தோழி ஆயினள். ஒருநாள் புறநகர்ப் பொய்கைக் கரையில், வேந்தர் மகள், தோழியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள.

ஹ ஹ் ஹா ஹா! ஹ ஹ் ஹா ஹா ஹா!

யார் அது? திடுக்கிட்டு நோக்கினர்' ஆம். அதி பயங்கர அரக்கர் தலைவன். அவன் பேர் சொன்னாலும், அன்றைய உலகம் அதிர்ச்சி யடையும். கொலையும் கொள்ளையும் கொடுமையும் மூத்தவன். பல மாதரைப் பங்கம் செய்த பாவி. அவன் பெயர் காலகேது.

இருப்புத் தண்டு. அம்புறுத் தூணி தாங்கிய தோள். வில் பிடித்த கை. முரட்டு சுபாவம். மூர்க்கன் அவன் முன்னேறி வரு வதை, ஏகாவலியும் தோழியும் அறிந்தனர். அஞ்சினர். எழுந்து ஓடினர். காப்பாளர் நடுவில் புகுந்தனர்.

---

காமாதிக் காட்டாள்கள் கட்டகன்று, பொல்லாத
மாமாயம் தீரச்செய் முன்னே சதாசிவமே

அட, இது என்ன? ஏகாவலியையே அல்லவா அவன் எதிர் நோக்கி வருகிறான். பார்க்கும் பார்வையே பயத்தை அளிக்கிறதே!

நில்! அப்படியே நில் என்று, இருந்த காவலாளிகள் எதிர்த்தனர்.

அவர்களைப் பார்த்து ஒரு பேய்ச் சிரிப்பு; அச்சிரிப்பொலி, அந்த இட முழுதும் பயங்கரமாக எதிரொலித்தது.

இருப்புலக்கையை எடுத்தான். கொள்ளித் தேள்போல் குதித்தான். ஓங்கி அடித்தான். மண்டைகள் உடைந்தன. காவலாளிகள் மாண்டனர்.

புலிபோல் பாய்ந்தான். பூவையைப் பற்றினான். அழுது கதறும் ஏகாவலியை, சிரித்தபடியே இழுத்துச் சென்றான்.

அடடே! அவளை விடு! பேதை என்னை, வேண்டுமேல் பிடித்துக் கொண்டுபோ என்று, தோழி யசோதை, குமுறி யழுது கூவினள்.

யசோதா! யசோதா!! என்று கதறுகிறாள் ஏகாவலி. தோழிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. தானும் அவனைத்தொடர்ந் தாள். அவள் வருகை, ஏகாவலிக்கு, ஒரு சிறு ஆறுதலாக இருந்தது.

ஏ தாதி! யசோதா! உன் தலைவி இவள்; நான் தலைவன். இவளை அழவேண்டாம் என்று சொல்! நீயும் இவளுடன் இரு என்று, காலகேது, அவளை யசோதையுடன் எடுத்தான்; தேரில் வலிந்து ஏற்றினான்.

அவனுடைய பட்டினம் சிங்கபுரம். அவனுடைய கனகமய மான மாளிகையில், அவர்கள் இருவரையும் அடைத்தான். வரன் வீரர் பலரைக் காவலாக வைத்தான். அரசகுமாரியும் தோழியும், ஒரு வரை ஒருவர் கட்டித் தழுவிக் கதறினர். என்ன பாவம் இது!

மூன்றும்நாள். மூர்க்கன் அவர்கள முன் வந்தான். ஏ சுந்தர வதனி! இனி நீ எனது பத்தினி. நான் உன் தாஸன்! ஹி ஹி ஹி என்று பல்லிளித்தான். அட! என்னைக் கண்டு, ஏன் அஞ்சுகிறாய்? இரு இரு! எழுந்திராதே என்று நெருங்கினான்.

பொல பொல என்று கண் மழை சிந்தியபடி, யசோதா! நான் என்னேடி செய்வேன்? என்று புழுவாய்த் துடித்தாள் அப் புனிதவதி.

ஐயா! புதுமுகம்! பழக்கம் இல்லாத உம்மைக் கண்டு, அயப் படுவது இயற்கை. விட்டுப் பிடிக்கவேண்டும்! இதை அறியாத உமது ஆண்மையும் ஒரு ஆண்மையோ?

யசோதா! என்னடி உளறுகிறாய்?

---

சேற்றுநீர் ஆற்றில் செறிந்துயர்வு சேர்வதுபோல்
நாற்றப்புன் வாழ்க்கையறும் நல்காய் சதாசிவமே

அம்மா! உளறல் அல்ல. பூனை வாயில் பட்ட கிளியான நர்ம், அகப்பட்ட இடத்தில் அமைதி காண்பதே அறம்.

அடி பாவி! நீயுமா இப்படி மோசம் செய்கிறாய்?

வாதம் கார சாரமாக வளர்கிறது. காலகேது கவனித்தான்.

யசோதா! அறிவுடையவள் நீ; அதை இப்போது தான் அறிகிறேன். எப்படியாயினும், இவளை இணக்கிவை! கோட்டையின் அகத்தும் புறத்தும் உலவ, உனக்குமட்டும் உரிமை யளிக்கிறேன். ஒருமாத அவகாசம் தருகிறேன். வருகிறேன் என்று சென்றான்.

யசோதா! தேவி உபாஸகராம்; அவர் பெயர் ஏக வீரராம்; அவர் விஷயததில், என் தந்தைக்கு அதிக அன்புண்டு. மணந்தால், அவரையே மணப்பேன், மனம் கொண்டது வாய்க்காதேல், மரணம் அடைவேன். இன்று அரக்கன் சிறையில் இருக்கிறேன். பாவி அவனுக்கு நீ பரிகிறாய்; நன்றாயுளது உனது நாடகம்!

பயித்யமே! ஏகாவலீ! என்னை நீ தவறாகப் புரிந்து கொண்டாய்! முள்ளைக் கொண்டே முள்ளை எடுக்க வேண்டும்! அதற்காக, அவன் எதிரில் அப்படிப் பேசினேன். இல்லையானால், முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது. அது இருக்கட்டும்.

இதைக் கேள்! உனக்கும் எனக்கும், இளம் பருவத்தில், அந்தணர் ஒருவர் உபதேசித்த, அம்பிகை மந்திரத்தை, உவந்து இடையறாது உருவேற்றுவோம். ஒருமாத கால தவணை இருக்கிறது. அதற்குள் தேவி அருள்வது திண்ணம். அதுவரை இங்கு வரும் உணவுகளை, மறுக்காமல் ஏற்போம்; குப்பையில் அதைக் கொட்டுவோம்; காற்றைப் புசிப்போம். தாங்க முடியாமல், போனால் உயிர் போகட்டும்! என்ன சொல்கிறாய்?

ஆம். அது நல்ல யோசனை என்றாள் ஏகாவலி. அன்று முதல் இடையறாது, மானசிகமாக, இறைவியை இருவரும் வழிபடலாயினர்.

நிராதாரையே! நிராசையளே! எதற்கும் ஆதாரையே! பக்த பரிபாலனி! புவனேஸ்வரி! மங்களாம்பிகே!

"திருவே! விளைந்தசெந் தேனே! வடியிட்ட தெள்ளமுதின்
உருவே! மடப்பிள்ளை ஓதிமமே! ஒற்றை ஆடகப்பூந்
தருவே! நின் தாமரைத் தாளே சரணம்! சரணம் கண்டாய்!
அருவே! அனங் கரசே! மதுராபுரி அம்பிகையே!"

"கரும்பும், கணையைந்தும், பாசாங்குசமும் கைக்கொண்(டு,)
[அடியேன்

---

தஞ்சமென்றே தாயைத் தாவுகின்ற சேயானேன்
அஞ்சலென்றே வந்தெனை நீ ஆளாய் சதாசிவமே

திரும்பும் திசைதோறும் தோன்று கண்டாய்! இசை தேக்குமணிச்
சுரும்புண்ட காவியும், சோதி நிலாவின் துளிரும், சற்றே
அரும்பும் கனங்குழலாய்! காசியில் வாழும் ஆரணங்கே"

என்று, இருவரும் எம் இறைவியை ஏத்திப் போற்றி யிருந்தனர்.

ஒருநாள் ஏக வீரர், குதிரை மேல் ஏறினர். கங்கைக் கரை யோரம வந்தார். குக் கூ என்று குயில்கள் கூவின. வனப்பு மிகுந்தது அங்கிருந்த சோலை. மான்கள் துள்ளின. பூக்கள், சோலையின் பொலிவு காட்டின. அவைகள் ஒவ்வொன்றிலும், ஏகவீரர், அம்பிகையின் கைவண்ணமே கண்டார்.

தேவி! உன் அருளாடலே இந்த உலகம்! ஊன்றி உணர்ந்தார்க்கே, இந்த உண்மை விளங்கும்! வாய்திறந்து இப்படி வழுத்தினர்.

ஆஅஅ......இஹிஇஹி......உஹூஉஹூ......

ஆ! என்ன இது? ஓசை வந்த திசையை, ஊன்றி ஏக வீரர் உணர்ந்தார். அத்திசை நோக்கி நடந்தார்.

குரளிப் பறவையைப் போல், குமுறி யழுகிறாள் ஒரு கோதை. ஏக வீரர் இதயம் அதிர்ந்தது. அம்மங்கையை அணுகினர்.

அம்மா! யார் நீ? இந்த இளம் பருவத்தில், உனக்குக் கவலை விளைவிக்கக் காரணர் யார்? யான் இந்நாட்டு மன்னன். தேவி யருளால், என் உதவி கிடைக்கும் திண்ணம். அஞ்சாதே! உள்ளது சொல்!

ஐயா! தங்கள் பெயரை அறிவிக்க முடியுமா?

என் பெயர் ஏக வீரன்.

ஹா! உண்மையாகவா? இரண்டு நாளாக, உம்மை எங்கே காண்பது? எப்படி சந்திப்பது? என்று ஏங்கி யிருக்கிறேன்.

இரக்கம் அற்றவன் ஒரு அரக்கன். கடியவன் அவன் பெயர் காலகேது. ரைப்பியர் மகள் ஏகாவலியைச் சிறைப் பிடித்திருக் கிறான். அவள், தேவி பக்தை. அவள தோழி நான். ஒருமாத தவணை வைத்து, இப்போது ஒதுங்கி யிருக்கிறான். இரண்டு நாள் கள்தான், இன்னம் இருக்கின்றன.

நாங்கள் உமா மந்திரத்தை உருவேற்றி யிருந்தோம். இரண்டு நாட்குமுன், நான் மெய்ம்மறந்து உறங்கினேன். கனிந்து வந்தது ஒரு கனவு. ஊனெலாம் உருக, உமாதேவி, உவந்து எனது முன் நின்றாள்.

---

தேகாதி மோகத்தால் தீயபவ நோயடைந்தேன்
ஆகாதென் றேயெனை நீ ஆளாய் சதாசிவமே

"உறங்காதே! எழுந்திரு! புறப்படு! கங்கைக் கரைக்குப் போ! என்பக்தன் ஏகவீரன் அங்கு வருவான். அவனால் உங்கட்கு விடுதலை கிடைக்கும்" என்று சொன்னாள் எம்பெருமாட்டி.

அடியவர் ஆற்றலை யறிவிக்க, தேவிக்கு இப்படி ஒரு நாடகமோ! கனவு கலைந்தது. விழித்தேன். ஏகாவலி, நியானத்தில் இருந்தாள். அவளை யறியாமல் வெளிப்பட்டேன்.

இடைவழியில் எவரும், என்னை யறியாதபடி, அவர்கள் கண்ணை மறைத்தாள் போலும் காமாட்சி. எவரும் என்னைத் தடுத்திலர். அரும் பாடுபட்டு நடந்தேன். இங்கு வந்தேன்.

அன்ன பூரணியின் பேரருளால், கனிந்த மனமுடைய உம்மை இங்குக் கண்டேன். என் பிரிவால், ஏகாவலி, எப்படி ஏங்கி மனம் இடிகிறாளோ? இதை எண்ணும் போதெல்லாம் நோகிறது மனம்.

அம்மா! அம்பிகை கட்டளை அதுவாயின், இப்போதே புறப்படுவம். ஏறு குதிரையில்! வழி காட்டிவா என்றார் ஏகவீரர். அவர்கள் மனம் அறிந்ததுபோல, பாய்ந்து சென்றது பரி.

மறுநாள் சூர்யோதயம். அரக்கன் பட்டணத்தை அடைந்தனர். காவலாளிகள், இவர்கள் வருகையைக் கண்டனர். என்ன வியப்பு? ஏன் வருகிறது அழுகை? எல்லாருமே அழுகிறார்களே!

உடனே தம்மைத் தேற்றிக் கொண்டனர். காரணம் இன்றிக் கலுழ்ந்ததை எண்ணி, தாமே கலங்கி நின்றனர். அசுப அறிகுறி என்பது இதுதானா? என்றெல்லாம் எண்ணினர். உடனே ஓடினர். அரண்மனையுள் புகுந்தனர். தம் தலைவனைத் தேடினர்.

ஏகாவலீ! என்னைப் பார்! அகில உலகமும் என்னைக் கண்டு அஞ்சுகிறது. அங்கம் இல்லாத காமன் ஒருவன்தான், என்னைப் படாதபாடு படுத்துகிறான். எங்கே உன் தோழீ? என்றபடி, வெறி கொண்ட நாய்போல், நேர்மை யுடையாளைக் காலகேது நெருங்கினன்.

சீ துராத்மா! சத்யாயதாட்சீ! நீலாயதாட்சீ! காமாட்சீ! கா! அம்பா! கா என்று கதறுகிறாள் காரிகை.

ஹாஹ்ஹாஹா! நீதானடி எனக்கு அந்தத் தேவி என்று, பாய்ந்து பாவையைப் பற்ற அணுகினன். புலியைக் கண்ட மான் போல், நடுங்கிக் குலைத்தாள் நங்கை.

பின்புறத்தில் யாரோ ஓடி வருகிறார்கள்! யார் அது? சினந்து திரும்பினன்.

---

களை நீக்கி யேபயிரைக் காப்பார்போல், என்றன்
தளை நீக்கி ஆளல் தருமம் சதாசிவமே

அரசே! அபாயம்! அபாயம்! இங்கிருந்த தோழி யசோதை வெளியேறி விட்டாள்! இவனை மீட்க, அவள் எவனையோ அழைத்து வருகிறாள். பார்த்ததும் அவனை, எங்கள் மனம் பதைக் கிறது. அகாரணமாக வருகிறது அழுகை! அவளொடு இவளைக் கூட்டி அனுப்பிவிடலாம். அதுதான் நலம்.

கடும் சினம் கொண்டான் காலகேது. ஆவி உள்ளவரை இந்த அணங்கை விடமாட்டேன். இதோ வருகிறேன். நீங்கள் முன் னேறிச் செல்லுங்கள்! உம்! ஆகட்டும் என்று அதட்டினன். அவர் கள் சென்றபின், தானும்போர்க் கோலம் பூண்டான், திரும்பினான்.

ஏகாவலீ! உன் தோழி கெட்டிக்காரி. அது இருக்கட்டும். என்னை எதிர்த்து வருபவன் உன் தந்தையா? வேறு யாரேனுமா? தந்தையா யிருந்தால், மன்னிப்பேன்; பிறரா யிருந்தால், அவன் தலையை உன் எதிரில் வெட்டி வீழ்த்துவேன் என்று உறுமினன்.

நான் ஒன்றும் அறியேன். எம்பெருமாட்டியின் திருவுளப்படி, எதுவும் ஆகும் என்றாள் ஏகாவலி.

பொய்! பொய்! சாணக்யம் மிகுந்த இவளும், இவள் தோழி யும், காலஹரணம் செய்து, எதிரியை உள்ளே வரவிட்டிருக்கிறார் கள். எதிரியின் முன் நிற்க முடியாமல், சின்னா பின்னமாக, நம் படைகள் சிதைகின்றன என்றார்கள் வேவுகாரர்கள்.

அப்படியா? என்று கர்ஜித்தான் காலகேது. உடனே புறப் பட்டான். போர்க்களத்தைக் கண்டான். எங்கும் அரக்கர் பிண மலை. ஆத்திரம் அதிகரித்தது.

வலசாரி இடசாரி மாறி மாறி, அதோ, அதோ, காலகேதுவும் ஏகவீரனும், கடும் போர் புரிகின்றனர்...வரவர உக்ரம் வளர் கிறது. ஏகவீரன் கை தளர்கிறது. மத யானைபோல், காலகேது வந்து வந்து மோதுகிறான்.

"சத்திகவுரி மகமாயி ஆயி என்சத்துருவை,
குத்தியிரணக் குடரைப் பிடுங்கிக் குலாவி நின்றே,
இத்திசை எங்கும் நடுங்கக் கிரிகள் இடிபடவே,
கித்தம் நடித்து வருவாள் வராகி என்னெஞ் சகத்தே"

என்று ஏத்துகிறார் ஏகவீரர்.

யசோதை இதயம் அதிர்ந்தது. மறைவான இடத்தில் இருந்து, போர் போகும் போக்கைக் கணித்துக் கொண்டிருந்த அவள், ஏக வீரன் நிலையை அறிந்தாள்.

"ஐயும் கிலியும் எனத்தொண்டர் போற்ற, அரிய பச்சை மெய்யும், கருணை வழிந்தோடு கின்ற விழியும், மலர்க்

---

நடைக்கலமா யிவ்வுலகில் நான்பட்ட பாடுபல
அடைக்கலங்காண் ஐயா அருளாய் சதாசிவமே!

கையும் பிரம்பும், கபாலமும் சூலமும், கண்ணெதிரே
வையம் துதிக்க வருவாள்; வராகி மலர்க் கொடியே!"

என்று தேவியைத் துதித்தபடியே இருக்கிறாள்.

சிறையில் இருக்கும் ஏகாவலி, தன் தலைவிதியை நொந்தாள். ஏகநாயகி! அன்னே! எம்மான் இடத்தில் இருப்பவளே! அசுர எருமையை அழித்தவளே! திருமால் சோதரி! கா! அம்பா! கா! கா என்று கண்ணீர் பெருக்கிக் கதறுகிறாள்.

என்ன வியப்பு! திடீரென்று, ஏகவீரன்மேல் ஆவேசம் எழுந்தது. மோது மோது என்று காலகேதுவை மோதுகிறான். எப்படி வந்தது இந்தப் பலம்? பிரார்த்தனைக்கு இரங்கும் பெருமாட்டியின் அருள் ஆட்சி என்பது இதுதானா? ஒருவர் பிரார்த்தனை, இருவர் செய் துதி; மூவர் போற்றுதல்; ஆம். அருளார்ந்த தேவி, அதன் பின்னும் பொறுப்பாளோ? அம்பிகை, ஏகவீரனில் ஆவிர்ப்பவித்தாள்; அதன் விளைவுதான் இது!

ஏகவீரன், இரும்பு உலக்கையால், அதிரும்படி காலகேதுவை அடித்தான். மண்டை உடைந்தது; மலைபோல் சாய்ந்தது அவன் உடல்.

கண்ட யசோதை மனம் களித்தது. ஓட்டம் பெருநடை கொண்டு ஓடினள்.

ஏகாவலீ! பரமேஸ்வரி கிருபையால், உருத்த வேதனை ஒழிந்தது. அரக்கன் அழிந்தான்; எழுந்திரு! என்று, நடந்ததை உரைத்தாள்.

அம்பா! அம்பிகே! எல்லாம் உன் அருளாடல் என்றபடி, ஏகாவலி எழுந்தாள். அழுக்குடை. தலைவிரிகோலம். மருண்ட கண்கள். இளைத்த மேனி. ஆம். இந்நிலையில் இருந்த ஏகாவலியை, ஏகவீரன் கண்டான்.

இனி என்ன செய்யவேண்டும் என்றான். இவளை, இவள் தந்தையிடம் ஒப்படைப்பதுதான் தக்கது என்றாள் யசோதை.

ஆம். அதுதான் சரி என்று, படைகள் சூழ, அவளைப் பல்லக்கில் ஏற்றி யனுப்பினன். பாவையின் கண்கள், ஏகவீரனை நோக்கி, நன்றி செலுத்தின.

மகளை பிரிவால் வருந்தியிருந்த ரைப்பியர் தம்பதிகள், அவள் வருகையால் அகமிக மகிழ்ந்தனர். யசோதையால் எல்லா வரலாறும் அறிந்தனர்.

---

சிறைமீட்ட செல்வனுக்கே எம் செல்வி என்றனர். ஆம் அதுதான் சரி என்றாள் யசோதை.

ஏகவீரனுக்குத தூது போக்கினர். விவரம் கூறினர். இணங்க வைத்தனர். மணத்தை நடத்தினர்.

மகிழ்ந்த தம்பதிகள், எல்லாம் சிவையருள் என்று எண்ணினர். அதன் மூலம், வாழ்க்கையில் கனிந்த இன்பம் கண்டனர்.

வாழ்க தேவி தாஸர்கள்

---

# சிவகிரி எது?

(சிவக்கவிமணி C.K. சுப்ரமணிய முதலியார்)

சிவகிரி என்ற பெயராலே ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழ்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பழனிக்குச் சேர்ந்தனவாகக் கொண்டு அச்சிற் பதித்திருக்கின்றனர். சிவகிரி என்று பழனிக்கு ஒரு பெயர் உண்டு. ஆனால் இந்தத் திருப்புகழ்களெல்லாம் பழனியைப் பற்றியனவோ? என்பது ஐயப்பாடு. சிவன் மலை என்று திருப்பூருக்கும் காங்கயத்துக்கும் இடையில் ஒரு திருமுருகன் கோயில் இருக்கின்றது. அது மேல் கொங்குநாட்டைச் சார்ந்த காங்கய நாட்டினைச் சேர்ந்தது. பிரசித்திபெற்று இன்றும் விளங்கும் பதி. குன்றம் சிறிதாயினும் புகழும் தெய்வத் தன்மையும் பெரிதும் விளங்கும் பதி. மலையின் உச்சியில் முருகன் குடி கொண்டு வெளிப்படையாய் அருள்புரிந்து விளங்குகின்றான். பல அற்புதங்களும் வரப்பிரசாதங்களும் இன்றைக்கும் வெளிப்படையா யுள்ளன. அமாவாசை திங்கள் வெள்ளிக்கிழமைகளில் ஏராளமான அன்பர்கள் குழுமி வழிபட்டுகின்றார்கள். இதற்கடுத்த பட்டாலியூருக்கும் இருனைச் சார்த்தித் திருப்புகழ் இருக்கிறது. ஸ்ரீமத் அருணகிரிநாதர் மேல் கொங்குநாட்டின் இப்பகுதியில் யாத்திரை செய்து குன்றுதோறாடல்களுக்கெல்லாம திருப்

---

மண்விருப்பும் பொன்விழைவும் மங்கையர்செய் மோகமதும்
எண்விருப்பால் நீநோக்க இரியும் சதாசிவமே

புகழ் பாடியுள்ளார்கள். கோயமுத்தூர், பேரூர், மருதமலை, குருடிமலை, செஞ்சேரிமலை முதலியனவாக சுற்றுப்புறமுள்ள குன்றுதோறாடல்களுக்கெல்லாம் திருப்புகழ்கள் உண்டு.

பழனியும் இப்போது மதுரைச் சில்லாவுடன் கூடிப் பாண்டி நாட்டிற் புகுந்துவிட்ட போதிலும், அது நம் கொங்கு நாட்டைச் சேர்ந்ததுதான். ஆனால் அது கீழ்க் கொங்கு நாட்டின் பகுதியாகிய வைகாவூர் நன்னாட்டைச் சேர்ந்தது. இது மேல்கொங்கு நாட்டைச் சேர்ந்தது. சிவகிரி என்பது பழனிக்குப் பெருவாரியாக வழங்கிய பெயரன்று. எனவே இத்திருப்புகழ்களைச் சிவன் மலை—(சிவகிரி) என்ற தலைப்பின்கீழ் மேலே கண்ட விவரங்களைக் குறிப்பிட்டுப் பதிக்க வேண்டியதவசியம். அன்பர்கள் மயங்காதிருக்க ஏதுவாகும்.

**சிவகிரி அடைக்கலப் பத்து** என்று என் தந்தையார் திரு மகாவித்வான் கந்தசாமி முதலியார் ஒரு சிறு நூல் எழுதியுள்ளார்கள. அந்தச் சுவடிகள் பழுதுபட்டுப் போயினபடியால், பெயர்த்தெடுத்துப் பிரதி பண்ணி வைத்திருந்தேன். அதுவும் பழுதுபட்டு இறந்துபோய் விட்டது. அதில் இரண்டு பாடல்கள் கொண்ட ஒரு ஏடு மட்டும் பழுதுபட்ட நிலையில் அகப்பட்டது. அன்பர்கள் அறியும்படி அதனை இங்கே தருகின்றேன்.

சிவகிரி அடைக்கலப் பத்து

கோததார் குழற்குற மின்மண வாள! குறுநகைசெய்
சித்தா! வுமைக்குச் சிறுவா! வளுதியிற் சிவமலை
முத்தா! வடியரை முத்திபெற கூட்டு முழுமுதலாம்
அத்தா! சிவகிரி யாயடி யேனுன் னடைக்கலமே (1)
குன்றைக் கிழித்த சிவகிரி வாழ்கும ராகரிய
குன்றைக் கடுத்த பகடேறிச் சீற்றங் கொடுகடுகி
யென்றைக்கு வெஞ்சமன் பாசக் கயிற்றோ டெதிர்வருமோ
அன்றைக் கெதிர்வரு வாயடி யேனுன் னடைக்கலமே (2)

கோயமுத்தூர் மகாவித்வான் திரு கந்தசாமி முதலியார் பாடியன.
(கடுத்த = ஒத்த)

மண்ணும்பெண் ணும்பொன்னும் மாதேவி தண்ணருளா
எண்ணியநன் ஏத்தமதி யீதி சதாசிவமே

கட்டுரை—2

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

**2. கீதை பிறந்த சந்தர்ப்பம் :—**

பாச பந்தத்தால் கட்டுண்டு பகைவர்களைக் கொல்லத் தயங்கி நின்ற பார்த்தனுக்கு, பகவான் அவனுடைய ஆசா பாச மயக்கத்தை நீக்கும் பொருட்டு கீதோபதேசம் செய்தார் என்பது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த் விஷயம் கீதை பிறந்த இந்த சந்தர்ப்பம் மகத்தானது. அதே சமயத்தில் வேடிக்கை யானதும்கூட! அஹிம்சையைப் போதிக்கும் கீதை போர்க்களத்திலே தோன்றியது என்பது விநோதமா யிருக்கிறதல்லவா? அர்ஜுனனுக்கு உபதேசம் செய்த கீதை அகில உலகத்திற்கும் எக் காலத்திலும் பொருந்தக் கூடிய பேரிலக்கியமாக விளங்குகிறது. பார்த்தனுடைய மயக்கம் தியாகத்திலிருந்து பிறந்ததல்ல. முற்றிலும் பாசத்திலிருந்து பிறந்ததே யாகும். பாசத்தினுல் ஏற்படும் அன்பு சார்புடையது. அந்த அன்பு ஜீவ ராசிகள் எல்லாவற்றின் மீதும் பாயாது. குறிப்பிட்ட சிலரின் மீது—பாந்தவ்யம், சுயநலம், நட்பு, உடலுறவு இவற்றின் அடிப்படையில் மட்டும் ஏற்படுகிற அன்பு வெறும் பாசமே யாகும். இந்தப்பாசம் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள அம்சம் அழிந்ததும் இந்தப் பாசமும் மறைந்துவிடும்.

எந்த விதமான சார்புமின்றி எல்லாவற்றின் மீதும் சமத்துவமாயும் சகஜமாயும் ஏற்படுகிற அன்புதான் பரத்துவத்திற்கு வழி காட்டும். அத்தகைய அன்புக்குப் பகைவர் இல்லை. உறவினர் என்றும் அன்னியரென்றும் பேதமில்லை. மனிதனென்றும் மிருகமென்றும் வித்தியாசமில்லை. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரமனை அத்தகைய அன்புபடைத்தவனுல்தான் வழிபட முடியும்.

---

வாட்டமிலா தோங்குகின்ற வான்பொருளாம் நின்னுட்சி
காட்டினுல் ஆகாதோ கண்ணே சதாசிவமே

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் காரணமாக பகவான் போரில் அர்ஜுனனுக்குத் துணை செய்தார். துரியோதனாதியர்களைக் கொன்று அன்பு செய்யுமாறு பார்த்தனுக்குத் தெளிவுண்டாக்கினர்.

ஆம்! நட்பு கொண்டுதான் அன்பு செய்ய முடியும் என்பதில்லை. கொன்றுங்கூட அன்பு செய்யலாம். இங்கு செயல் முக்கியமல்ல. செயலுக்குக் காரணமான நோக்கமே முக்கியம். உன்னத நோக்கத்தோடு உலகத்தையே அழித்தாலும் பாபமில்லை!

கண்ணனுக்கும் பார்த்தனுக்கும் உன்னதமான நோக்கங்கள் இருந்தன. துரியோதனாதியர்களை ஒழித்து விட வேண்டுமென்பதல்ல அவர்களுடைய எண்ணம். துஷ்டர்களை அழித்துவிட வேண்டுமென்பதுதான் நோக்கம். நாட்டின் நல்வாழ்வுக்காக நயவஞ்சகர்களை ஒழிக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கம்.

பாச உணர்ச்சியால் சிறிது நேரம் பகைமையைக்கூட மறந்திருந்தான் பார்த்தன். கீதோபதேசம் பெற்ற பிறகு அவன் போர்க்களத்தில் தன்னுடைய பகைவர்களைக் காணவில்லை. உலகத்தின் பகைவர்களைக் கண்டான். தன்னோடு எதிரியைத் தொடர்புறுத்திப் பார்க்கும் பொழுதுதான் பாசமோ, நேசமோ, அல்லது பகைமையோ தோன்றும். உலகத்திற்காக பொருத்திப் பார்க்கும் பொழுதுதான் பந்தமற்ற நிச்சய புத்தி கிடைக்கும்.

துரியோதனாதியர்களை அன்பு செய்வதற்கு, அவர்களுக்கு நல்வழியைக் கொடுப்பதற்கு அவர்களை அழித்துவிட்டது. எனவே அவர்களை அழித்து அன்பு செய்தார்கள் கண்ணனும் பாண்டவர்களும்!

உலகம் ஒரு ரோஜாச் செடி. நல்லோர் அனைவரும் ரோஜா மலர்கள். தீயோர் அனைவரும் அச் செடியிலுள்ள முட்கள். அந்த முட்களை நீக்கியே நன்மலர்களை அணிய வேண்டுமல்லவா?

"சம்ஹாரம்" என்பது சம்ரட்சித்தலுக்கு மாறானதல்ல. சிலரை சம்ஹரிப்பதன் மூலமே அவர்களை சம்ரட்சிக்க

---

தலமெலாம் நின்னாட்சி தாங்கண்ட மேலோர்,
நலங்கண்டார்; அவ்வாழ்வு நல்காய் சதாசிவமே

முடியுமென்பதற்கு பாரதமும் கீதையும் சிறந்த உதாரணங்கள்.

ஆக்கவும் அழிக்கவும் செய்பவன் ஆண்டவனே. அவன் அழிப்பது அழிவாகாது. ஒரு சிருஷ்டியே யாகும்.

பாசத்தால் உறவுகொள்ள முடியும். பகைமை கொள்ளவும் கூடும். ஆக்கும் பாசம் அழிக்கவும் செய்யும். பாசத்தால் கட்டுண்ட அர்ஜுனன் துஷ்டர்களை வெல்லவில்லை. பாசம் நீங்கிய பார்த்தன்தான் அவர்களை அழிக்க முடிந்தது.

யாருக்குப் பாசமில்லையோ, பந்தமில்லையோ, சர்வ சகஜ சமபுத்தி யுள்ளதோ அவர்களுடைய செல்வங்கள் யாவும் பாரமார்த்திகமானவை. அவர்களுடைய நோக்கம் பரந்த தன்மை யுடையது. தனி நபர்களான பாமரர்களுடைய உலகம் வேறுபட்டது. அவர்கள் உறவாடி நட்பு கொள்வார்கள். அழித்தும் நட்பு கொள்வார்கள். அவர்களுடைய செயலுக்கு தோஷம் கற்பிப்பது தவறு. நோக்கம் கற்பிப்பதுதான் சரியான வழி.

படைத்துக் காக்கும் பரமன் அழித்தும் காக்கிறான்! அழிப்பது என்பது ஒரு வழியே தவிர வேறல்ல. ஆனால் அந்த வழி எல்லோருக்கும் ஏற்றதல்ல. எந்தச் சமயத்திற்கும் பொருத்தமான தென்று கூற முடியாது.

அர்ஜுனன் பெற்ற உபதேசம் அகிலம் பெற்ற உபதேசமாகும். அவன் கண்ட விஸ்வரூப தரிசனம் நாம் அனைவரும் காணவேண்டிய ஒன்றே யாகும்.

பாசமொழித்து, பந்தமறுத்து, சலனமற்று, மமதை யகற்றி, அகந்தையை அழித்த நிலையில் நாம் காணமுடிவது அந்த விஸ்வரூப தரிசனம் ஒன்றேதான். காண்பன யாவும் கடவுள் மயமே என்ற உண்மையுணர்வே விஸ்வரூப தரிசனம். பகவான் என்று எங்கேயோ ஒருவர் பெரிய பூதாகாரமான உருவத்தோடு வளர்ந்து காட்சியளிப்பதுதான் விஸ்வரூப தரிசனம் என்று எண்ண வேண்டாம்!

பார்த்தன், பார்முழுதும் பரமனைக் காணும் பேறு பெற்றான். அதனால்தான் அவன் திடமாகவும் தெளிவாக

---

வெந்துயரம் யாவும்தீர்த் தின்றேநின் மெய்க்கருணை
தந்துகா! நிற்குச் சரண்யான் சதாசிவமே

வும் செய்யலாற்ற முடிந்தது. தன்னுடைய மக்களோ அல்லது எதிரியுடைய மக்களோ இறந்தபோது வேறு பாடற்ற நிதானத்தை இழக்காமலிருக்க முடிந்தது. கொன் றும் நன்றே செய்ய முடிந்தது. அழிப்பதன் மூலம் ஆக்க முடிந்தது! போர்க்களத்திலே கீதை பிறந்தது. எதற்காக? நிரந்தரமான அமைதியைப் போதிப்பதற்காக! இங்கு போர் என்பது நோக்கமுடைய ஒரு மகத்தான செயல். பாரதப் போர் அழிவு வேலையல்ல. ஆக்கும் பணியே யாகும். அன்புச் செயலே யாகும். அது பாண்டவர்களுக் கும் கௌரவர்களுக்குமிடையே ஏற்பட்ட சண்டையல்ல. தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையே ஏற்பட்ட யுத்தமே யாகும். முடிவு "சத்யமேவ ஜெயமே" என்ற மூலமந்திரம் தான். (தொடரும்)

---

# அஹிம்ஸா புருஷர்கள்

(ஆ. கி. ரங்கராஜன்)

இங்கு நாம் பார்க்கப் போவது அவதரா புருஷர்களான கண்ணன் கந்தன், காகுஸ்தன் முதலியோரை அல்ல என்றாலும், அவர்களின் அம்சம் படைத்த அன்பும் அருளும் உருவான வேறொரு மூன்று அவதார புருஷர்களேயாம்.

மானிடன் ஆறறிவு படைத்தவன். அவனால் எத்தகைய செயல்களையும் ஆற்ற முடியும். உதாரணமாக, தவம் புரிவோரும், மானிட ரன்றி வேறல்லர். இவ்வளவு திற மையும் எப்படி ஏற்பட்ட தெனில், அதுவே ஆறுவது அறிவாகிய பகுத்தறிவின் உதவியினாலேயாம். அதுவே இறைவன் மானிடனுக்கு அளித்த மாபெரும் சாதனம். ஆயினும் மானிடன் அச்சாதனத்தைத் தவறான வழிகளில் பிரயோகித்துத் துன்ப சாகரத்தில் மூழ்குகின்றான். இவ் வேளையில் இறைவன் தன்னால் படைக்கப்பெற்ற மானிடம் துன்புறுதல் ஆற்றாது, அவனைத் திருத்தி நல்வழிப் படுத்தி அருளத் திருவுளம் கொண்டு அவனியில் தானே மானி

---

டனுக அவதரித்து, பல அற்புதங்களும் நல்லுபதேசங்களும் புரிந்து மானிடனை ஆட்கொள்கிறுன்.

இவ்வாறு மானிடன் நிலை தவறிய காலையில் அகிலம் அறியாமையில் அமிழ்ந்திருந்தது. எங்கும் அறநெறி தடுமாறியது. மன்னரும் மற்றவரும் சுயநலம் மிக்காராகி, பிறர் நலம் கருதாமல் உயிர்வதை புரிந்து உண்டனர். அது வன்றி, அத்தீவினை தம்மைத் தொடரா வண்ணம் செய்து கொள்ள, பழி பாபங்களினின்று விலகிக் கொள்ள இறைவனின் பெயரால் ஜீவ இம்சை புரிந்து வந்தனர். யாக யக்ஞங்களைப்புரிந்து பேசும் திறமையற்ற பிராணிகளை உயிருடன் சித்ரவதையின் மூலம் படுகொலை செய்து இறைவனுக்கு அவற்றை அர்ப்பணித்து விட்டதாகப் பாவித்து அவற்றைப் புசித்தனர். குற்ற மற்ருேரைத் துன்புறுத்தினர்.

இவ்வாறு மானிடன் உழன்ற காலையில் இறைவன் மானிடனைத் திருத்தத் திருவுளம் கொண்டு பூவுலகில் தானே ஓர்மானிடனுய் அவதரித்தான். ரோகினி நதிக் கரையில் உள்ள கபில வாஸ்து நகரின் மன்னனும் சுத்தோதனனுக்குப் புதல்வனுய் மாயாதேவி என்னும் அவ்வரசனின் பட்ட மகிஷிக்குத் தோன்றினன். சித்தார்த்தன் என்ற பெயருடன் வளர்ந்து சகலகலைகளையும் கற்றுத் தேர்ந்து பொறுப்பேற்கும் வயதின் எல்லையை எட்டினன். இவ்வாறு இருக்க, சுத்தோதனன் சித்தார்த்தனுக்கு முடி சூட்ட நிச்சயித்தான். மைந்தனே சதா ஆலோசனையில் ஈடுபட்டவனுய் விளையாட்டுக்களில் தலையிடாமல் இருந்தனன். கண்ட மன்னன் சந்தேக முற்று எங்கு அவன் துறவி ஆகிவிடுவானே எனு அஞ்சி, உடனடியாக யசோதரா தேவி என்னும் அரசிளங் குமரியை மைந்தனுக்கு மண முடித்தனன். உலகின் புறத்தே அதாவது வெளியிலே மக்கள் படும் இன்ப துன்பங்களை மைந்தன் அறியாதவாறு சகல வசதிகளும் பொருந்திய அரண்மனை யொன்றை நிர்மாணித்து, அதில் தமது மைந்தனை அமர வைத்தான். எல்லா இன்பங்களையும் அனுபவித்து வந்த சித்தார்த்தனுக்கு ராகுலன் என்ற ஒரு புத்ரன் ஜனித்தான்.

---

மானிடன் உய்வதற்கும் அவன் அறிவு பண் படுவதற்கும் இறைவன் அவ்வப்போது தக்க சந்தர்ப்பம், சூழ்நிலை முதலியவற்றைத் தோற்றுவிப்பன், அவற்றை உணரும் மானிடனே உயர் நிலை எய்த முயற்சிப்பன். இவ் விஷயத்தைத் தனது வாழ்க்கையின் மூலம் நிரூபித்துக் காட்டினான் இறைவனும் சித்தார்த்தன்.

அழகும் அற்புதமும் நிறைந்த வேலைப்பாடுகளமைந்த ஏழடுக்கு மாளிகையில் அமர்ந்து, அறுசுவை உண்டிகளை அருந்தி, அரும்மனைவி யசோதரையுடனும் அரும் குழவி ராகுலனுடனும் சித்தார்த்தன் ஆனந்தித்திருக்கும் நாளில், ஒரு சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

மேன் மாடியினின்று சித்தார்த்தன் வெளிக் காட்சிகளைக் கண்டானந்தித்துக் கொண்டிருக்கையில், ஒரு கிழவன் தடி ஊன்றிச் செல்வதைக் கண்டான். கண்ட அவன் மனம் கலங்கியது. "விசித்திரமான மானிடப் பிறவியின் போக்கு இவ்வாறும் ஆகுமா?" ஒரு குருடன் கோலூன்றித் தடுமாறிக் கொண்டு வந்தான். சித்தார்த்தன் அதையும் கண்டான்.

ஒரு நாள் பிச்சைக்காரன் ஒருவன் தனது அரண்மனை வாயிலில் நின்று பிச்சை கேட்பதை மாடியிலிருந்தே சித்தார்த்தன் கண்ணுற்றான். "மானிடனுக்கு இத்தகைய துன்பங்கள் எல்லாம் ஏற்படும் என்பது உண்மைதானா! அப்படியெனில் மானிடனுக்கு நற்கதி என்பதும் சாந்தி என்பதும் கிடையாதா?" என்று சிந்திக்கத் தொடங்கினான். அவனது சிந்தனை விளக்குக்குத் தூண்டுகோல் போன்று மற்றொரு சம்பவமும் நிகழ்ந்தது.

இன்னொரு நாள் நள்ளிரவில் வெளியில் ஏதோசப்தம் கேட்டு சித்தார்த்தன் தூக்கம் கலைந்து எழுந்து பார்க்கையில், ஒரு பிரேதத்தைப் பலர் சுமந்து செல்லுவதும், பின்னால் செல்வோர் கதறி அழுவதையும் கண்டான். அப்போது ஒருவன் "இனி சாகப் போகும் பிரேதங்கள் இப்போது இறந்த பிரேதத்தைத் தூக்கிச் செல்கின்றன" என்று கூறி, கட கட என சிரித்துப் பிதற்றினான்.

---

வெம்பிறவித் துன்பத்தை வெல்லற்குன் பால்கொள்
அன்பதுவே நல்லவழி யன்றோ சதாசிவமே

"இவ்வளவு தானப்பா, மானிட வாழ்க்கை" என்றான். அவ் வார்த்தையைக் கேட்ட சித்தார்த்தன் நெஞ்சம் கொதித்தது.

"நீ செய்து மற்றவர்க்கு வழிகாட்டு" என்று ஆன்றோர் கூறியுள்ள நல்லுரை சித்தார்த்தனின் மனச் செவியில் ஒலித்தது. உடனே சித்தார்த்தன், உள்ளம் துணிந்து சற்றும் தாமதியாமல் மனைவியையும் மைந்தனையும் விட்டு விட்டு, தனது ஆடம்பர ஆடை அணிகளைக் கழற்றி எறிந்து, எவருமறியாமல் அந்த இரவிலேயே அவ்வரண்மனையை விட்டு வெளியேறிச் சென்றான்.

சித்தார்த்தன் பல இடங்களில் அலைந்தும், பல பெரியோர்களைக் கலந்தாலோசித்தும் ஓர் முடிவு காண இயலாமல், இறுதியாக கயாக்ஷேத்ர மடைந்து, போதி மரத்தடியில் அமர்ந்து தியானத்தில் மூழ்கிய போது, அநேக உண்மைகள் அவனுக்குப் புலப்பட்டன. அரச குமாரனான சித்தார்த்தன் அரும்பெரும் ஞானியாக மாறினன். உலகோர் அவனைப் புத்தர் பிரான் என அழைத்தனர். (புத்தர்-ஞானஸ் வரூபர்) புத்த பகவான் உயிருலகிற்கு ஆற்றிய தொண்டு கள் பல. அவற்றுள் ஒன்று.—

காட்டு மார்க்கமாக புத்தர் சென்று கொண்டிருந்தார். அப்போது ஓர் இடையன் இருநூறு ஆடுகள் கொண்டுள்ள ஓர் மந்தையை ஓட்டி வந்து கொண்டிருந்தான். அந்த ஆடுகளில் ஒன்று கால் ஊனமடைந் திருந்தது. இடையன் தள்ளாடித் தடுமாறிச் செல்லும் அந்த ஆட்டை தன் கைக் கோலால் ஓங்கி அடித்தான். அந்த ஆடு துள்ளித் துடித்தது, அதைக்கண்டார் புத்தர். அவர் உள்ளம் இளகியது. உடனே இடையனைக் குறுக்கிட்டார்.

புத்தர்:-ஏனப்பா, அந்த ஆட்டை அடிக்கிறாய்? அது உனக்கு என்ன தீமை செய்தது?

இடையன்:—நீர் யாரய்யா என்னைக் கேட்க? நான் அவசரமாகப் போகவேண்டும். இந்த ஆடு இப்படி நடந்தால் எப்படி சீக்கிரமாகப் போய் சேர முடியும்?

புத்தர்.—சகோதரனே! சினம் வேண்டாம். அந்த ஆட்டை நான் தோளில் தூக்கி வருகிறேன். எங்கே போக வேண்டும்?

---

பட்டுப்பட் டேயறிந்தும் பாழ்மனந்தான் பாசத்தால்
கட்டுப்பட் டேகலங்கல் காணீ சதாசிவமே

இடையன்:—பிந்து சாரமன்னர் ஓர் யாகம் செய்கிறார். அதற்குப் பலி இடவே இந்த இருநூறு ஆடுகளும் ஓட்டிச் செல்லப் படுகின்றன.

இடையனின் இவ்வார்த்தையைக் கேட்ட புத்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆயிரம் கொள்ளிகளால் ஏக காலத்தில் தன்னைப் பொசுக்குவது போல, அவர் உள்ளம் பற்றி எரிந்தது.

"யாகத்தில் பலியிடுவதற்காகவா இவ்வளவு உயிர்கள்?"

"ஆம்"

புத்தர் "நானும் வருகிறேன்" என்று கூறி அந்தக் கால் ஊனம் அடைந்த ஆட்டைத்தன் தோளில் சுமந்து அவனைப்பின் தொடர்ந்தார்.

பிந்துசார மன்னனின் யாகசாலை; அந்தணர் பலர் யக்ஞம் புரிந்து நெய்யை ஊற்றி மந்திரங்கள் ஓதிய வண்ண மிருந்தனர். ஜீவபலியிடப்படும் தருணம் வந்தது. முதலில் ஓர் ஆடு கொண்டு வரப்பட்டது. அது தன் கால்கள் நான்கும் கட்டிப் போடப்பட்டுத் தலைகீழாகத் தொங்க விடப்பட்டது. ஒரு வேதியன் மந்திரம் ஜபிக்க, மற்றொருவன் மிகவும் கூர்மையான தொரு வாளை ஏந்தி அவ்வாட்டை அணுகினான். வேதியன் ஓதிய மந்திரங் களின் சாரம் புத்தருக்குத் தெளிவாகப் புரிந்தது;

"ஓ தேவர்களே! நாங்கள் கொடுக்கும் இந்த பலியை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த ஜீவனுக்கு முக்தியை வழங்குங்கள். பிந்துசார மன்னனை ஆசிர்வதியுங்கள். உங்களுக்கு மங்களம்!"

யாவற்றையும் மறைவில் இருந்து கவனித்த புத்தர் பிரான், சட்டெனப் பாய்ந்து கொலைஞனது கையை இறுகப் பிடித்துக் கொண்டார். கொலைஞன் திடுக்கிட்டு, "யாரையா நீர்? எதற்காகக் கையைப் பிடிக்கிறீர்?" என்றான்.

புத்தர்:—எதற்காக இந்த கொடிய காரியம் செய்கிறீர்?

வேதியன்:—எது கொடிய காரியம்? யாகத்தில் பலியிடுவதா? யார் உமக்குக் கூறினர்?

---

எத்தனை யான் சொன்னாலும் ஏதில்மனம் பேய்க்குரங்காய்த் தத்தித் திரிதல் தடைசெய் சதாசிவமே

புத்தர்:—கொலை புரிவது கொடுமையில்லையா? அந்த ஆடு என்ன அறியும்?

வேதியன்:—யாகத்தில் பலியிடுவது கொலையல்ல. பாவமுமல்ல. பலியிடப்படும் பிராணியின் ஆத்மா ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு முக்தி அடைகிறது. மேலும் இந்தப் புனித காரியத்தினால் அரசனுடைய பாபங்கள் தொலைந்து இன்ப உலகை அடைய ஏதுவாகிறது!

புத்தர்:—இல்லை. தவறான மனோபாவத்தைக் கொண்டுள்ளீர்கள்! ஆடு முக்தி அடைகிறது என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்?

வேதியன்.—அருமறைகள் முறையிடுகின்றன.

புத்தர்—உயிர்வதை புரிய மறைகள் இசையவில்லை. நன்றாக ஆலோசித்துப் பாருங்கள். ஆடு முக்தி என்பதை அறியாதது. இவ்வுலகில் வாழ்ந்திருக்கவே விரும்புகிறது. அதற்கு உணவளித்து ஆதரிப்பதே நல்வினை. அதைவிட்டு அப்பிராணியைச் சித்ரவதை செய்து கொலை புரிகிறீர்கள். ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் செய்யத் தகுந்த செயலா இது? ஓர் உயிரை சிருஷ்டிக்க எவ்வாறு மனிதனுக்கு ஆற்றலும் அதிகாரமும் இல்லையோ, அது போலவே ஓர் உயிரைக் கொல்லவும் அதிகாரமில்லை. யாகத்தில் பலியிடப்படும் பிராணி முக்தி அடைகிறது என்பதில் ஸ்திரமான நம்பிக்கை உங்களுக்கு இருப்பின், ஓர் காரியம் செய்யுங்கள். உங்களின் பெற்றோர் விருத்தாப்பியம் எய்தி விட்டார்கள். அவர்கள் முக்தியை விரும்புகிறார்கள். அவர்களைப் பலியிடுங்கள்.

புத்தரின் சொற்பொழிவு அங்குள்ளோரைக் கலக்கி விட்டது. அவர் வதனத்தில் திவ்விய தெய்வ தேஜஸ் வீசியது. செய்வதொன்றும் விளங்காமல் வேந்தனும் வேதியரும் அவரையே கூர்ந்து கவனித்த வண்ணமிருந்தனர்.

புத்தர் தொடர்ந்து பேசினார்: "இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர்களைக் கொல்வது, கொற்றவனின் பொருள்களையே கொள்ளையடிப்பது போலாகும். இக் காரியத்தை

---

பெருமாயம் தீர்த்துழலும் பேதைமையும் தீர்த்துன்
திருவாசல் சேர்ந்திறைஞ்சச் செய்தி சதாசிவமே

எவன் செய்ய அனுமதித்தாலும் இறைவனால் மிகக் கொடிய தண்டனையே விதிக்கப் படுவான். நீங்கள் இந்த யாகத்தில் எதையேனும் பலியிடத்தான் வேண்டுமெனில் நான் இருக்கிறேன். நான் துறவி. நான் முக்தியை விரும்புகிறேன். முதலில் என்னைப் பலியிடுங்கள். அல்லது யாகத்தை நிறுத்துங்கள். ஓர் மானிடன் வாழ எண்ணிலாத உயிர்கள் கொல்லப் படுவது மிகவும் அபாயகரமான மன்னிக்க முடியாத பாபமாகும்."

புத்தரின் பொன்மொழிகளைக் கேட்ட பிந்துசாரர் மனமுருகி புத்தரின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். "எனது கண்களைத் திறந்தீர்கள்; இந்த யாகம் நடத்தப்படமாட்டாது. பிந்துசார மன்னன் இனி உயிர்க்கொலையை அனுமதியான். இது இந்நாட்டில் மட்டுமல்ல, எந்நாட்டிலும் இந்தச் செயலைத் தவிர்க்க முயற்சிப்பேன். கடந்த காலக் குற்றங்களுக்கு வருந்துகின்றேன். தாங்கள் மன்னிக்க வேண்டும் என்றான். புத்தர் பெருமான் அவனுக்கும் அறவுரைகள் பல கூறினார். அவை (1) மதுமாமிச உணவை நீக்கு. (2) ஆசைகளை விடு. (3) சினத்தை ஒழி. (4) உயிர்களிடம் அன்பு செலுத்து. (5) சமமான நீதி வழங்கு. (6) உண்மையே பேசு. (7) பெரியோர்களையும் நல்லோரையும் நேசி. (8) இறைவனிடம் பக்திகொள்.

பிந்துசாரனும் அவ்வுரைகளை ஏற்று அவ்வாறே நடக்க இசைந்தான். அன்று தொட்டு உயிர்களைப் பலியிடும் யாக கைங்கர்யங்கள் உலகினின்று ஒழிந்தன.

அசோக மகாசக்ரவர்த்தி பிந்துசாரர் வழிவந்த மகா புருஷர் ஆவர். கலிங்கப் போர் அவரது கருணை உள்ளத்தைக் கலக்கியது. (பன்னீராண்டுகள் நிகழ்ந்த) அக்கொடும் போரில் பல லக்ஷம் மக்கள் மாய்ந்தனர். இறுதி வெற்றி அசோகருக்குக் கிடைத்ததாயினும் அது சரித்ர முக்யத்துவம் வாய்ந்த அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்யனுடைய வெற்றியே எனக்கருதி, உலக மக்கள் வாழ புத்தரின் கொள்கையே சிறந்த தெனக் கண்டு அவற்றைக் கடைப்பிடித்தார். அகிலமெங்கும் அஹிம்சை நெறியைப் பரப்பினார். பல அறங்களைப் புரிந்தார். அவரது ஆட்சி

---

மிகவும் புரட்சிகரமானது. அமைதியானது. ஆனந்த மளிப்பது. அன்பு மயமானது. அறிஞர் அனைவராலும் பாராட்டப் படுவது.

இன்று பாரத நாடு அந்நிய ஆட்சியினின்று விடுபட்டு உலக அரங்கில் முதன்மை ஸ்தானம் பெற்றுத் திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் காந்தி மகான் என்பதை அகிலத்தோர் உணர்வர். புத்தர் பிரானின் உபதேசங்களைக் கடைப் பிடித்தொழுகி, மானிடனால் இவ்வாறு வாழமுடியும் என்பதைத் தன் வாழ்க்கையில் நிரூபித்தவர் மகாத்மா.

கிராம மக்கள் சிலரை அவர் பேட்டி கண்ட பொழுது, அவர்கள் நான்கு முழத்துண்டை உடுத்தியும், சிலர் தங்கள் குடும்பத்தில் ஒருடையையே மாற்றி மாற்றி அணிந்தும், உணவுக்குத் துயருற்று ஏங்கியும் இருந்ததைக் கண்டு தாமும் அவ்வெளிய வாழ்க்கையை மேற்கொண்டார். இங்கிலாந்தில் வட்டமேஜை மகாநாடு நடைபெற்றபோது கிடைத்த அழைப்பிற்கும் அதே துறவிக் கோலத்தில் சென்றார்.

இறுதியில் அஹிம்சையும் அன்பும் அடிப்படையாகக் கொண்ட சுதந்திர ஆட்சியை நிறுவினார். புத்தரின் கொள்கைகளைப் பின்பற்றிய அசோக மகா சக்ரவர்த்தியின் தர்ம சக்கரமும், மூன்று சிம்ம உபதேசக் கற்றூணும் காந்திஜி நிறுவிய ஆட்சியின் சின்னங்களாம்.

மானிட சமுதாயம் உய்ய காந்திஜி பட்ட பாடுகள் அனந்தம். அதற்கென அவர் எழுதிய உபதேச நூல்கள் பல. அகில மனைத்தும் அன்பின் குடை நிழலில் வாழ ஆர்வம் கொண்டு அதற்கெனவே வாழ்ந்து அமரத்துவம் எய்தினார். புத்த பகவானைப் போன்று தாமும் மாபெரும் அஹிம்ஸா புருஷரே என்பதைச் செயலில் விளக்கிக் காட்டினார் என்றால் மிகையாகாது.

புத்த பகவானின் ஜயந்தி வரும் இப்புனித வைகாசி மாதத்தில், இம்மகா புருஷர்கள் மூவரையும் நினைவு கூர்ந்து அவர்கட்கு அஞ்சலி செய்வோமாக!

---

அருமையருள் பாலித்த இன்றுமுதல் ஆயுள்
பெருமைபெறும் என்றொருசொல் பேசாய் சதாசிவமே

# மனிதன் எவன்?

(ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி)

‘மனிதன் எவன்?’ இந்தக் கேள்விக்கு விடைதேடி, அறிந்து விட்டால், உயர்ந்த அறிவும், மேலான தத்துவமும் அடைந்தவர்களாகி விடலாம். படைப்பின் ஒரு விநோதம் மனிதன். நற்குணங்களும், நல்லறிவும், பண்பும் வாய்ந்த ஓர் உயர்ந்த மனிதன், மேன்மகன், இயற்கையின் ஒப்பற்ற கைத்திறனை விளக்குகிறான். பூமியையும் சொர்க்கத்தையும் இணைக்கும் ஒரு ஆளாக இவன் நிற்கிறான். மிருகமும் தெய்வமும் கலந்த ஓர் விநோத ஜந்து மனிதன். அகிலத்தில் ஓர் அணுவளவே இருக்கும் இம் மனிதன், அகிலத்தை ஆள்பவனாகுதல் கூடும். தனது வாழ்வையும் வீழ்வையும் அவன் தானே தேடிக் கொள்கிறான். இறைவனின் இன்ப பிம்பம் இம் மனிதனிடம் பிரதிபலிக்குமாகில், ‘மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே’ என்பது மேலோர் எண்ணம்.

மனிதனை மனிதனாகப் பார்ப்போம்! ஆஹா! எத்தனை அறிவு மாட்சி! எவ்வளவு ஆக்க சக்தி! நடை உடையில் எத்தனை அழகு! ஆம். ஓர் தேவதைபோல் இருக்கும் இவனை இவ்வுலகில் நடமாடும் தெய்வம் என்று அழைத்தால் தவறுண்டோ! ஆனால் இதே மனிதன் மிருகமாகவும் மாறுதல் கூடும். உலகில் காணும் மிருகங்களனைத்தும் அவன் உள்ளத்தில் உறைவதைக் காணலாம். சிங்கத்தின் சினம், புலியின் பாய்ச்சல், நரியின் நாடகம், ஓநாயின் ஓர வஞ்சனை, பாம்பின் விஷம், முதலையின் மோசக் கண்ணீர், யானையின் பழிவாங்கும் மனப்பான்மை, குரங்கின் நிலையற்ற போக்கு, தேளின் கொட்டும் தன்மை, கழுகின் கீழ் நோக்கு இவையனைத்திற்கும் உறைவிடமாகிறான் மனிதன். மாறான இரு உருவங்கள் இவனிடம் ஒன்று பட்டிருப்ப

---

நல்லருளாய் ஓங்குபர நாதநலம் கேட்டுனது
எல்லையிலா இன்பமென் றெய்தும் சதாசிவமே

தைக் காணலாம். அழிவுதரும் அசுரத் தன்மை, ஆக்கம் அளிக்கும் அமரத்தன்மை, இரண்டும் இவன்பால் உள்ளது. சத்தியம் காக்கும் சான்றோனாகவோ, சாத்தானின் அடிமையாகவோ இவன் தன்னை ஆக்கிக் கொள்கிறான். ஆம்—விண்ணும் மண்ணும் சேர்ந்த ஓர் விந்தை வஸ்துவே மனிதன். இயற்கை பயந்த எப்பொருளும் அவனைப் போல் மாட்சி பெற்ற மேல் நிலை அடைவதில்லை. இறைவன் உருவில் மனிதன் படைக்கப் பட்டதாகப் பகர்கின்றனர் பெரியோர்; வலுவில், வடிவில், வன்மையில் அவன் எவ்விதத்திலும் மிருகங்களைக் காட்டிலும் உயர்ந்து விடவில்லை. ஆனால் வாழ்க்கையில் வேறு பட்டானாகில் அவனையே மனிதன் என்று அழைத்தல் கூடும். உண்டு உறங்கி, மனைநடத்தி, மக்களைப் பெருக்கி வாழும் வாழ்க்கையில் அவனைக் காட்டிலும் அழகிய பாங்கில், அமைதியான முறையில் மிருகங்கள் வாழ்கின்றன எனில் தவறில்லை. ஆனால், உலக போகங்களுக்குப் புறம்பான இன்பத்தைத் தேடி, தெய்வத்தன்மையைப் பெற்று, அது தன்னுள் பிரதிபலிக்கச் செய்யும் புனிதனாக மனிதன் மாறுங்காலை, அவன் உண்மை மனிதனாகிறான்.

மனிதன் எனும் சொல் மனம் உடையவன் எனும் பொருளை விளக்குகிறது. ஆம்! இயற்கையின் படைப்பிலே எதற்கும் கிடைக்காத ஒரு பெருமை, ஒரு பேறு, இம்மனிதனுக்குக் கிட்டியுள்ளது. அதுவே அவனை மிருகத்தினின்றும் வேறுபடுத்தி தெய்வத்துடன் இணைக்க வல்லதாகிறது. அந்தப் பெரும் பொக்கிஷம் மனமே. அறிய, ஆராய, அலசிப் பார்க்க, அறநெறியிற் செல்ல அதை மனிதன் உபயோகிப்பானாகில், அவன் உண்மை மனிதன் ஆகுதல் கூடும். கிரேக்க நாட்டுப் பேரறிஞர், டயோஜனீஸ் என்ற பெரியார், பட்டப் பகல், பன்னிரண்டு மணிக்கு கரத்தில் விளக்கு ஏந்தியவராக நடுத்தெருவில் நடந்தாராம். அங்குமிங்கும் விளக்கைத் திருப்பி ஏதோ தேடினார் அப்

---

பாவத்தார் பண்பகன்று பஞ்சேந்த்ரியக் காடகன்று
ஆவலித்தே நிற்சார அருளாய் சதாசிவமே

பெரியார். 'யாதோ தாங்கள் தேடுவது' என்று அண்டையி லுள்ளோர் அதிசயித்து வினவ, 'நான் மனிதனைத் தேடு கிறேன்' என்று விடையிறுத்தார் அவ்விந்தை மனிதர். மனித உருவிலே, பசுத்தோல் போர்த்த புலிபோல, நடமாடும் இருகால் மிருகங்களே உலகில் உள்ளன; மனத்தை உபயோகப் படுத்தும் மதியூகம் வாய்த்த மனிதன் ஒருவனு மில்லையே என்று ஏங்கினர் போலும் அப்பெரியார்.

உண்மை மனிதன் யார்? எவனது உடல் அவன் மனதின் ஏவலாளாக இருக்கிறதோ, எவன் மனது அவன் இந்திரியங்களை அடக்கும் எஜமானனு யுள்ளதோ, எவனது இச்சைகள் அவன் புத்திக்குப் பணிபவையாக உள்ளனவோ, எவனது புத்தி ஆத்ம அநாத்மா விவேகத்துடன் அதர்மத்தை விட்டு விலகி ஆத்ம நாட்டம் கொண்டு, அதற்கான வழியினை மேற்கொள்கிறதோ, எவன் உலக அழகினை இறைவனின் அழகெனப் போற்றியும், அகிலத்தை அவன் உருவென நேசித்தும், உண்மையை உணர்ந்தும், தீயதை வெறுத்தும், நல்லன நாடியும், அல்லன விட்டோடியும், நல்லதே செய்து, நல்லோனுக முயன்றும், பிறரைத் தன்னிலும், தன்னைப் பிறரிலும் கண்டு அனைவரையும் அன்புசெய்தும், போற்றியும் வாழ்கிருனே அவனே மனிதனுகிருன். மண்ணில் வேர் படைத்த மரமொன்று விண்ணில் தன் கிளைகளைப் பரப்புதல் கூடும். மண்ணில் பிறந்த மனிதன் விண்ணில் தன் மனத்தை விரித்திடுவானுகில் அவன் அதி மனிதன் அல்லது பூரண மனிதனுகிருன். அவன் அகத்திலும் புறத்திலும் அளவாக, முறையாக வளர்ச்சி பெற்றவன். பண்பிற் பெரியோனுய், அறிவில் முதிர்ந்தோனுய், அன்பிற் சிறந்தோனுய் அவன் விளங்குவான். அறத்தைச் சார்ந்திருப்பதால் அற்பக் கவலைகள் அவனிடமில்லை. உண்மை அறிஞனு படியால், உதவாத உலக சிக்கல்கள், துக்கங்கள், அவனை அணுகா. ஆத்மபலம் படைத்தவனுன படியால், யாரிடத்தும் அவனுக்கு பயமில்லை. இன்பமோ,

---

கலக்கமிலா அன்பருளக் கண்மணியாம் ஞானம்
துலக்கியமு தூட்டியருள் தூய சதாசிவமே

துன்பமோ, நோயோ, பிணியோ, வாழ்வோ, சாவோ எது வும் அவனை வாட்டுவதில்லை. அவனது எண்ணங்களனைத் தும் உள்முக மாகிய படியால், அவனுக்கும் உலகுக்கும் எவ்வி தத் தொடர்புமில்லை. அவனது சித்தம் முழுதும் வியாபித்து நிற்கும் ஆத்மீகப் பித்தம். அத்தகைய உன்மத்தன், ஐய முண்டு பயமில்லை மனமே" எனவும், "நாமார்க்கும் குடியல் லோம், நமனையஞ்சோம்" எனவும் ஜய பேரிகை கொட்டு வான். எவன் இக்கீழ்கண்ட நிலவுலக வாழ்க்கையில் நிக ழக்கூடிய ஏற்றத் தாழ்வுகளால் எள்ளளவும் கலங்காது, நெஞ்சத்தை தன்வசம் கொண்டு, உள் நினைவில் ஊன்றிய வனாய், ஆத்மீகப் பரவசம் அடைந்து, சஞ்சலங்களனைத்தும் சாந்தியாக மாற்றக் கூடியவனோ அவனே பூரண மனிதனாகி றான். அத்தகைய பூரண மனிதன் தன்னருகிலுள்ள கீழ் ஜாதி பறவைகளையும் ஆத்மீக நாட்டமுறச் செய்வா னெனில், மானவரை அவன் வானவராக்குவான் என்பதில் ஐயமுண்டோ. அப்பெரு மகனின் சொற்கள், வழக்கில் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் ஊன்று கோலாகவும், அவனது அருட்செல்வம் ஊர் நடுவே உள்ள பழுத்து நிற் கும் கனிமரம் போலும், நீர் நிறைந்த தடாகம் போலும் உதவி, மக்களுடைய அருட் பசியையும் தாகத்தையும் ஆற் றிடும் என்று பெருமக்கள் பகருகின்றனர்.

மனிதன் ஒருவன் மதிப்பை அளவிடுவது எங்ஙனம்? ஒருவன் தான் செய்ததாகச் சொல்லக்கூடிய தான தருமங் களின் எண்ணிக்கையைக் கொண்டு அவன் பெருமையை, மதிப்பை, நிர்ணயிக்க முடியாது. ஒருவன் அணிந்துள்ள ஆடையாபரணங்களைக் கொண்டு அவன் தகுதியை சீர்தூக் கிப் பார்த்தல் தவறு. மனிதனின் புறத் தோற்றத்திற்கு ஒருபோதும் மதிப்புத் தருதல் கூடாது. அவனது உள் பண்பையே நோக்குதல் வேண்டும். ஒரு மனிதன் எத்தனை படித்துள்ளான் என்று பார்ப்பதில் பயனில்லை. படித்ததில் எவ்வளவு பயன் படுத்தப் பட்டுள்ளன என்பதையே ஆராய

---

ஒப்பற்ற வான்கடல் நீயுள்ளத்திற் கெட்டாத
அப்பன் எனநின்னை யறிவேன் சதாசிவமே

வேண்டும். ஒரு மனிதன் திரட்டியுள்ள செல்வத்தையும், அவன் எங்கு, எவ்வாறு, எதில் தேர்ச்சி பெற்றுள்ளான் என்பதையும் அறிவதைக் காட்டிலும், அவன் எவ்வாறு வாழ்கிறான், எதைச் செய்கிறான், அவன் மனப்பக்குவம் எவ்வாறுள்ளது என்று நோக்குவதே அறிவுடைமை. ஒரு வனுடைய நடைமுறையே அவனது பண்பாட்டையும், இலட்சியத்தையும் விளக்கிவிடும். சரித்திரம் மனிதன் எவ் வாறு இருந்தான் என்பதைச் சொல்கிறது. சட்டம் மனி தன் செய்வதைச் சாற்றுகிறது. உடற்கூற்று சாஸ்திரம் அவன் எதுவாக இருக்கிறான் என்று இயம்புகிறது. அற நூற்கள் அவன் எது ஆகவேண்டும் என்று எடுத்து ஓது கின்றன; அநுபவ நூற்கள அவன் எதுவாக ஆவான் என்று விளம்புகின்றன. உலகத்தையும் உலக அதிசயங்களையும் உணர வேண்டுமாயின் மனிதனை ஆராய்ந்தால் போதும்.

ஒருவனை உலகத்தவர் உயர்ந்தவன் எனப் போற்றுவ தால் அவன் உண்மையில் உயர்வு பெற்றவனாகி விடமாட் டான். திடமான அறிவு, உறுதியான இலக்ஷியம், இறை வன்பால் பக்தி, மேற்கொண்ட செயலை முடிக்கும் ஆற்றல், தீயதைத் தகர்க்கும் திறமை இவையனைத்தும் நிரம்பிய வனே உண்மையில் உயர்ந்தவனாகக் கூடும். நாடுமுழுதும் சுற்றி, நகர்தோறும் சென்று பார்த்தால், ஆங்காங்கு பத்து, பன்னிரண்டு உள்ளூர் சிறு பிரமுகர்கள் (little great men) இருக்கின்றனர். அவர்கள் பரஸ்பரம் தங்கள் பெருமை யைக் கீதமிசைத்த வண்ணம், அதிலேயே இன்புற்றிருப்ப தைக் காணலாம். ஒருவன் படைத்துள்ள செல்வத்தைக் கொண்டோ, அல்லது கற்ற கல்வியைக் கொண்டோ அவனை உயர்ந்தவன், பெரியவன் என்று ஏற்றுக் கொள்ள முடி யாது. உயர்ந்த மனபரிபாகமும், தேர்ந்த ஞானமும், கனிந்த உள்ளமும், பயன்தரும் பண்பாடும் அமைந்தவனே உண்மையில் உயர்ந்தவன். அவனே முறை படைத்த மனி தனும் ஆவான்.

---

தற்பரநல் அற்புதமெய்த் தாரகமா வாழும்
கற்பகநின் தாணிழலைக் காட்டு சதாசிவமே

ஒவ்வொரு மனிதனும் ஒரு நடமாடும் நூலாக விளங்குகிறான். எனவே நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். புறத்தில் நாம் படிக்கும் புத்தகங்களிலிருந்து அடையும் அறிவைக் கொண்டு அகத்தைச் சோதித்துப் பார்ப்போம். நமது தோற்றத்திற்கு ஏற்ற ஏற்றத்தைக் கொடுப்போம். செய்கைக எனைத்தையும் சீர்படுத்துவோம். மண்ணில் பிறந்து, மண்ணில் வளர்ந்து, மண்ணில் மடிந்த போதிலும், மண்ணுக்கும் நமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை; விண்ணகத்தே நம் வித்து உள்ளது என்பதை உணர்வோம். வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடுவோமாகில், வானுறையும் தெய்வத்திற்கு நாம் ஈடாகுதல் கூடும். மனதில் மறைந்துள்ள தெய்வத்தை மறைத்த பொருள் மறையுமாகில், அஃது பூரண ஒளியுடன் பிரகாசிக்கும் என்பதில் ஐயமுண்டோ. ஐம்புலன்களுக்கும், அவற்றின் ஆசாபாசங்களுக்கும் அடிமைப் படாது, காம மெல்லாம் சிவ காமமாக்கும் ஜீவன் சிவனாகிறான். அவனே பூரண மனிதன். அத்தகைய பூரண மனிதர் இந்நாட்டில் பலர் தோன்றுவார்களாக!

---

உ

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சரணகமலாலயத்தை அரைநிமிஷநேர மட்டில்
தவமுறைதியானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையிலே சனித்த
தமியன்மிடியால் மயக்கம் உறுவேனோ;
கருணைபுரியாதிருப்பதெனகுறையிவேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்நமணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே;

---

பொன்னொளியாய் மின்னிப் பூரணமாய் விண்ணிவரும்
மன்னே எனையங்கு வையாய் சதாசிவமே

தருணமிதை யாமி குத்த கனமுதுறு நீள்ச வுக்ய
சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீ கொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா;
அருணதள பாத பத்மம் அதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது நித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

(1. கயிலை......குமரோனே!)

(பதவுரை.) கயிலை மலை நாதர் பெற்ற குமரோனே - திருக்கயிலாய மலையில் இருக்கும் அருள் நாதர் அருளிய ஆறு எழுத்துப் பெயரான!

(2. கடகபுயம்......அணிவோனே!

கடக புய மீது - கடகம் அணிந்த திருத்தோளில்; இரத்ன மணியணி - நவரத்ன மாலை; பொன் மாலை-பொன் சரடு; செச்சை - வெட்சி மாலை; கமழும் மணம் ஆர் கடப்பம் அணிவோனே-(நியதியான தெய்வ) மணம் நிறைந்த, கடப்பமலர் மாலை யணிந்த கடவுளே!;

(3. நெய்த்த வடிவேலா!)

நெய்த்த வடிவேலா-நெய்ப்புடைய ஞானவேல் ஏந்தியவனே!

(4. அருண......வீரா!)

அருண தள பாத பத்மம் அது-சிவந்த இதழ்களை யுடைய திருவடிக் கமலங்களை; நிதமுமே துதிக்க - ஒவ்வொரு நாளும் உவந்து போற்ற; அரிய தமிழ்தான் அளித்த மயில் வீரா - அருமையான தமிழ் மொழியை உபதேசித்த மயிலேறும் பெருமானே!

(5. அதிசயம்......அழக!)

அதிசயம் அநேகம் முற்ற-(தெய்விக) அதிசயங்கள் பல மென்மேலும் வெளியாக; பழநி மலை மீது உதித்த அழக-பழநிமலை மேல் (ஞான சூரியனை) உதயஞ் செய்த சௌந்தர்ய சிகரமான தெய்வமே!

---

தேனூர்ந்த மெய்ம்மையுள தேவர்க் கருளமுதே
ஆனநினைச் சார்ந்து அருள்பெறுவ தென்றேயோ

(6. திரு......முருகோனே!)

திருவேரகத்தின் முருகோனே - திருவேரக தலத்தில் உள்ள இளம்பரி பூரணி!

(சரணகமலம்......உறுவேனோ!)

சரண கமல ஆலயத்தை - திருவடித் தாமரையான ஆன்ம லயமடையும் (நியதியான) நிலயத்தை;

அரை நிமிஷ நேரமட்டில்-மூப்பது நொடியள வாயினும்; தவ முறை- தாவி மேலேறும் தனி நோக்கில்; தியானம் வைக்க அறியாத- அழுந்தி அனுபவிக்க அறியாத; சடன் -, கசடன் -, மூடன் -, மட்டி -, பவ வினையிலே சனித்த தமியன் - பிறவிக்கு ஏதுவான வினைச்சேற்றில் மூழ்ந்து ஆதரவற்ற அடியேன்;

மிடியால் மயக்கம் உறுவேனோ—(அறியாமையாம்) வறுமை யால், (பிரகிருதி) மயக்கத்தை (எதிர் காலத்தில் மேலும்) பெறு வேனோ?

(கருணை......செப்பு!)

கருணை புரியாது இருப்பது - (நீர் என்றும் புரியும்) கருணை (எளியேற்குப்) புரியாமல் இருப்பது; என குறை - என்ன (நிலையில் பிறந்த) குறை?; இவ்வேளை செப்பு - (அதை) இப்போதே அறிவித் தருளும்;

(தருணம்......உதவி புரிய வேணும்!)

தருணம் இது ஐயா - ஐயனே! (உணர்வொடு வேண்டும்) இதுவே (அறிந்து திருந்தும்) நல்ல நேரம்;

மிகுந்த கனமது உறு நீள் சௌக்யம்-மேலான கனம் தங்கிய நீடித்த ஆரோக்யம்;

சகல செல்வம் - (இம்மைக்கு வேண்டும்) பலவகை ஐஸ்வர் யங்கள்;

யோகம் - (சிவராஜ) யோக கடை;

மிக்க பெருவாழ்வு - சிறந்த பெருந்தன்மை யுடைய (அருள்) வாழ்வு;

தகைமை சிவஞான முத்தி-தகுதியுடைய அருள் ஞானத்தால் நேரும் பதமுத்தி;

பரகதியும் - பரமுத்தியாகிய இந்த ஆறு பேற்றையும்;

---

பாக்கியமே யோக்கியமே பாடிமறை தேடுமகா
வாக்கியமே ச்லாக்யமே வாழ்வே சதாசிவமே

நீ கொடுத்து உதவி புரிய வேணும் - நீர் அருளி, (ஒவ்வொரு கொடையிலும் உடனிருந்து) உதவி யருள வேண்டுகிறேன், (எ-று).

## விரிவுரை

### தோற்றம்

பிரகிருதியின் தொடர்பு இல்லாத அப்ராக்ருத கயிலாயர் சிவ பெருமான்; நான்முகன் மாலுக்கும் நாதர், அந்த நாத ஜீவனுள நம்பர். அவர் அருளிய குமரா! குமராய நம: என்று உனது நாமத்தையே அவர் ஓதுகிறார்.

### பிரபுத்வம்

கடகம்; இரத்னாரம், பொன்னாரம் முதலியன ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவம்; ஆ! அவைகள், உன் அரிய பிரபுத்வத்தை அறிவிக்கின்றன.

### குருத்வம்

சிறந்த படை வீரர், அணிவகுத்துச் செல்வர். எங்குச் செல் கிறார்கள் என்பதை, அவர்கள் அணிந்திருக்கும் மலர்களே அறிவிக் கும். வெட்சி கரந்தை வாகை தும்பை நொச்சி முதலியன, அம் மலர் வரிசை.

வெட்சி மலர் தரித்துச் சென்றால், பகைவர் நாட்டுப் பசுக் களை, இவர்கள் கொள்ளை கொளப் போகின்றார் என்று குடிகள் அறியலாம்; இப்படியே ஒவ்வொரு மலரும், அவர்கள் சென்று செய்ய இருக்கும் செயலை நினைவூட்டும். அரிய புறப் பொருள் நூற்களால், இவைகளை அறிகிறோம்.

முருகா! உன் திருமார்பில், வெட்சிமலா மாலை விளங்குகின்றது. அது, விஷயாதிகளான விரோதிகளிடம் இருக்கும் ஆத்மாக்களான பசுக்களை, நீ அபகரிப்பவன் எனலை அறிவிக்கின்றதே!

நாய்க் கொலைஞன் நாயைப் பிடிப்பதுபோல், இறுதியில் எவ ரையும் பிடிப்பவன் இயமன்; பிடித்தபின், உயிர்களை நரகத்தில் இட்டு நையச் செய்கிறான் அவன்—.

தப்பு வழியில் செல்லும் சேயைத் தாய் பற்றுவது போல், நாற்றச் சேற்றில் நலியும் எங்களை, அருள் மணம் காட்டி நீ அகப் படுததுகிறாய்; உயர்ந்த சிவபோகத்தை ஊட்டுகின்றாய்; நீயணியும் உயர்ந்த கடப்பமாலை, அவைகளை உணர்த்துகின்றதே!

---

எக்காலும் இன்ப இணையற்ற வாழ்வையருள்
முக்காலத் தும்விளங்கும் முதலே சதாசிவமே

## ஞானத்வம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்;
பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்;
உவமையிலாக் கலைஞானம்; உணர்வரிய மெய்ஞ்ஞானம்
எங்கட்கு நேரும்படி, இரக்கம் காட்டுகின்றது உன் ஞானவேல்.

*திருவடியே சிவமாவது தேரில்*
*திருவடியே சிவ லோகம் சிந்திக்கில்*
*திருவடியே செல் கதியது செப்பில*
*திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே*

என்கிறார் எங்கள் திருமூலர். அத் திருவடிகளையே என்றும் வந்தித்து இரு என்று, இனிய தமிழை அருளினை.

## விந்துத்வம்

விந்து தத்துவ விரிவே எழுத்தின் வரிவடிவம்; ஒளி வடிவம். அதனொடு நாதம் அளவளாவும். இரண்டும் கலந்த பின், எழுகிறது மொழிநடை.

மொழிகள் பல. அவைகளுள், வடமொழியும் தமிழும் வாகை சூடியுள. அவ்விரண்டுள், தாய்மை தழுவியது தமிழ். எளிய முயற்சியில் உச்சரிப்பு; உள்ளம்அள்ளும் இன்னொலி; தோண்டச் சுரக்கும் கேணிபோல், ஊடுருவி நோக்கில், உள்ளம் களி துள்ள வரும் பொருள் நடை. அப் பொருளில் நீ; ஆ! அதனால், அதை நாங்கள், அரிய தமிழ் என்று அனுபவிப்போம்.

ஆறு இன எழுத்தும் உன் ஆறுமுகம்; உயிரெழுத்துப் பன்னிரண்டும் பன்னிரு தோள்கள; பதினெட்டு மெய்யும் பதினெட்டுக் கண்கள்; ஃ எனும் ஆய்த எழுத்தே வேலாயுதம். அறிந்த மேலோர் இப்படி அறிவிக்கிறார்கள்.

புனித விந்து தத்துவம், மயில் எனும் உன் ஊர்தியாகப் பொலிவு பெறும்; இது என்று உள்ள எழில் மயில்.

மாபெரும் போரில், மகத்தான செல்வ இந்திரன் மயிலாகி வந்தான்- சுறு சுறுத்த மயிலாகித் துறு துறுத்தான் சூரன். ஆமை நடையில், கதையை அளக்கலாம்; ஊன்றி நோக்கில், உலகாய் விரியும் மயிலையும், மலைகளின் இறகுகளைச் சேதித்த இந்திர மயிலையும், 1008 அண்டங்களைத் தன் ஆணையில் ஆடக்கிய சூர மயிலையும், விறுவிறுத்து நடத்தும் வீரன் நீ ஒருவனே என்று உணர முடிகிறதே!

---

**இயம நியம இயைபுடையார் தம்மை**
**நயமாக நான்சார நல்காய் சதாசிவமே**

அ - வள்ளியார்: உ - தேவயானையார்: ம் - வேல்: விந்து - மயில்: நாதம் - சேவல், நீ-ஜோதி சொருபம்.

மூண்டு அதிசயம் முதிர்கிறதே. அற்புத தெய்வமான நீ, ஞானப் பழமாக மலைமேல் இருக்கும் இதுவே ஒரு பெரிய அதிசயம்.

பழம் விரும்பியவன்போல் நடித்த அதிசயம் பல, இன்றும் அத்தலத்தில் இருக்கிறதே!

சி - பரம்; வ - அருள் ம் - மௌனநந்தம் என்பர்.

கந்த கிரியில் இருந்து வந்த சிவகிரி சத்திகிரி மேல், நீர் ஆநந்த மூர்த்தமாக அமர்ந்திருக்கும் அதிசயமே அதிசயம். அபிஷேகிக்கும் போதெல்லாம், புதுப் புதுக் கோலம் காட்டும் அதிசயம் ஆனவர் நீர்.

ஜீவ போதம் வாங்கி, சிவ போதம் தருகிற அதிசய கோலம் உம் கோலம்.

ஜீவ போகத்தில் சேர்ந்தாரை மீர்த்து, சிவபோகம் தருகின்ற அதிசய செம்மல் அல்லவா நீர்!

சர்வ சங்க பரித்யாகத்துடன், "சும்மா இரு சொல்லற' எனும் அனுபவம் காட்டும் அதிசயம் உடையது பழநிமலை.

உம்மைச் சேவிக்க வருவாரை, வடி கட்டி அனுப்புகிறூர், அடிவாரத்தில் இருக்கும் திரு ஆவினன் குடியார்.

எனக்கும் ஜெபமாலை தந்து, இப்போது பழநிமலை மேல் ஏற லாம் என்று உத்தரவை அளித்தார் அந்தப் பிரபு.

உத்தரவின்றி, பழநிக்கு எவரும் அணுகுவது கூடாது; காவடி வரலாறுகள், அப்படிக் கணக்கின்றி யிருக்கின்றன.

வரம்பு மீறி வருவாரை, வாருங்கள்! வாருங்கள்!! வந்து, மொட்டை அடித்துக் கொள்ளுங்கள்! உங்கள் கையில் இருப் பதை, உண்டியிலே போடுங்கள்! போடுங்கள்; வெறுங் கையராய்த் திரும்புங்கள்! அது போதும் என்று அறிவிக்கும் அதிசயம் உடையது பழநிமலை.

மற்ற தலங்களைப் போல், பழநியாண்டவரைப் பள்ளி யறை யில் விடும் விழா, நாள் தோறும் இனிது நடைபெறுகின்றது. பிற ஸ்தலங்களில், வள்ளியாருடன் பள்ளியறை; பழநியிலோ, யாரு மற்ற பள்ளியறை. அப் பள்ளியறை, அக அனுபவத்தை அறிவிக் கின்றது.

---

பெண்டுமக்கள் செல்வாக்குப் பேராசைப் பேயுறவாய்
உண்டுறங்கும் தீங்கென் றொழியும் சதாசிவமே

"ஆரும் அறியாமல் இங்கே—வெண்ணிலாவே! எங்கள்
ஐயர் வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே!"
"அந்தரங்க சேவை செய்ய—வெண்ணிலாவே! எங்கள்
அத்தர் வருவாரோ சொல்லாய்—வெண்ணிலாவே!";

எனும் வள்ளலாரையும்,

"நடுக்கசுன்று—உன்னோடு—நடுவான பஞ்சணையில்
படுத்துறங்க நாளுசைப் பட்டேன் பரஞ்சுடரே"

எனும் பாம்பனடிகளையும்,

"வெண்ணெய்க் கட்டியும் சீனியும் ஊட்டலாம்;
விக்கிக்கொள்வதற் கென்செய்யலாம்; ஒரு
பெண்ணைக் கட்டிக் கொடுததிடலாம்; பிள்ளை
பெறுவதற்கும் உடன்படு வார்களோ?
பண்ணைக் கட்டிய மென்மொழியாள், உந்தன்
படுக்கை வீட்டில் வந்தாளே! அவள் தன்னைக்
கண்ணைக் கட்டி அணையாமல் ஏன் விட்டீர்!
கழனி சூழும் பழநியில் வேலரே"

என வரும் பாடல் திரட்டும், இந்த அநுபவத்தை இனிது அறிவிக்கின்றன அல்லவா!

காலம் பல கண்ட மலை பழநிமலை. பாவலர் பாடல் பல பெற்ற மலை பழநிமலை. சித்தர்கட்குச் சிறப்பளித்துச் செம்மாந்த மலை அந்த மலை.

சேரமான் பெருமாள், பழனியில் சிறந்த பணி செய்தார். சிவததின் அழைப்பில்லை. எனினும், சுந்தரருடன் வந்தார். நாம் அழைப்பை அனுப்பவில்லையே! எப்படி வந்தீர் என்றார் சிவனார். வலிந்து ஈர்த்தது அருள்; வந்தேன் என்றார் மன்னர்.

இவ்வளவும் செய்து, ஒன்றும் அறியார் போல், அதிசயம் பல உடைய பழநிமலை மேல், ஞான சோதியாக உதயம் செய்பவனே! என்பார், 'பழநிமலை மீது உதித்த அழகா! என்றார்;

உருக்குமணி மாளிகைப் பின்புறத்தில், பாரிஜாதம்; அது கண்ட சத்தியபாமை, என் மாளிகையிலும் அது இருக்கவேண்டும் என்றாராம். ஆகட்டும் என்று கண்ணன் அருளினனும். அன்றே சத்யபாமை மாளிகையின் பின்புறத்தில் ஒரு பாரிஜாதம் வந்ததாம். ஆனால், வளர்ந்தெழுந்த அத்தரு, உருக்குமணியார் மாளிகைப் பின்புறமாகச் சாய்ந்து, உரிய பயனை அவர்க்கு உதவியதாம். இதனை யறியாத பாமா, என் தோட்டததிலும் பாரிஜாதம் இருக்கிறது என்று இறுமாந்தாராம்.

---

என்போல் உனக்கடியர் எங்குமுண்(டு) என்றாலும்
உன்போல் எனக்குமுதல் உண்டோ சதாசிவமே

அதுபோல், இதுவரை பழநி பழநி என்று வந்த பாடல், திடீரென்று திருவேரகத்தின் புறமாகத் திரும்பி விட்டதே; இதுவும் ஒரு அதிசயந்தான்.

பழநியார் - பேசாத மோனப் பெருமான்; திருவேரகர் - பேசும் மோனப் பெருமான். பழநியார்-மணிபூரகர்; திருவேரகர்-அநாகத அமலர். எண்ண எண்ணப் பொருள் வளம் பொங்கி எழுந்து பொலிகிறதே! (திரு-அருள்-ஏர் - எழுச்சி; அகம் - இதயம்.)

ஏரகத்தில் இருப்பவன் திரு ஏரகன்தானே! பிறர் உபதேசித்தால், அது ஒரு செவியில் ஏறும்; வியாபக ஏரகன் உபதேசித்தால், அது இரு செவியிலும் ஏறும்; இதயத்தில் பாயும்; வாழ அதுவே வழி.

"சிவனார் மனம் குளிர உபதேச மந்திரம்—இரு
செவிமீதிலும் பகர்செய்—குருநாதா!" என்பது திருப்புகழ்.

இங்கே, கண் கொடுத்த தீர்த்தம்; கண்கொடுத்த விநாயகர்; ஞானக் கண் திறக்கும் முருகன் இருப்பதாக, புராணம் இனிது புகல்கிறது.

வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்த தலையும் தந்தீர்! இச் செயலில் ஈடுபாடு இருந்ததேல், ஆன்மா சார்ந்ததன் வண்ணம் பேறு பெறும். உலகம் தோன்றிய நாள் தொட்டு, நீர் கருணை புரிகிறீர்; புரியும் கருணை எனக்குப் புரியவில்லையே; அது இதனால் சேர்ந்த குறை என்று அறிவிததால், அது தீர உடனே முயல்வேன்: என்ன குறை அது? இப்போதே அறிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

சரணம் - அடைக்கல நிலயம்; கமலம் - தாமரை: (கம் - நீர்; அலம் - அசைவு; நீரில் அசைவது பற்றிய காரண இடுகுறிப் பெயர்.) கமலம் - நீரில் அசையும்; சரணகமலம், நீர்மை யுள்ளத்தில் நிழலிடும்.

"அல்லில் கதிதான் அருள சிறந்த வேலிறை
புல்லிநம் உள்ளம் புகுமேல்—அவன் தாளில்
கல்லென்னும் நன்னுதம் கேளாமோ கேளோய்"

என வரும் செய்தியும், "மலர்மிசை யேகினான்" எனும் குறளும் இங்கு எண்ணல் நலம்.

சரண கமலம் ஒன்றில்தான், ஆன்மா லயமடைய முடியும். எதை எதையோ பற்றிப் பற்றிப் படுகேடடைந்த ஆன்மாவிற்கு, பரம இன்பம் தருவது அப் பாதங்கள்தான்.

---

பெற்றசேய் மேல்பாசம் பெரிதுடைய தாயேபோல்
உற்றஅன்னை நீயென்றே ஓர்ந்தேன் சதாசிவமே

அத் திருவடிகளை, அரை நிமிஷம் எண்ணினாலும் போதும்; எண்ணும் முறை தவ முறையாக இருக்க வேண்டும்.

உணர்வு கீழ் நோக்கித் தாவினால், பிறப்புச் சேற்றில் அழுந்திப் படழியும்; மேல் நோக்கித் தாவினால், வீடு பேற்றின்பம் விளையும். தவத்திற்குப் பகுதி - தாவு. தியானம்—அழுந்தி யறிவது எனும் பொருளது.

சடன் - அசைத்தால் ஒழிய அசையாத அஃறிணைப் பொருள் போல்பவன். ஏன் அப்படி யானேன்; கசடன் - சாரமற்ற வண்டல்; மும்மல அழுக்கில் முழுகி யிருக்கிறேனே அதனால் தான் இப்படி. மூடன் - மோசமான வினை அறிவை மூடியதால் வந்த பெயர். மட்டி—"உண்டதே உண்டும், உடுததே உடுத்தும், உரைத்ததே உரைத்தும், கண்டதே கண்டும்" அதற்கு மேல் விசாரணை யில்லாத மட்டியா யிருக்கிறேன்; தடிப் புத்தி யுடைய வன் ஆயினேன். பிறந்தேன்; புண்ணியம் என் பிறப்பில் இல்லை. புண்ணியத்தால் பிறந்தோர்; புண்ணியம் பாவம் இரண்டாலும் பிறந்தோர் பலருளர். நானோ பல வினையிலே ஜனித்தவன்.

பவ வினை - பாவ வினை; இத் தீவினையி லிருந்து பிறந்தேன். புண்ணிய தேவதைகளின் கண்காணிப்பு, இதனால் பொய்த்து விடுமே! அவர்கள் நோக்கம் இல்லாமையால்,

"தமியன்" ஆயினேன்.

தமியன் - திக்கற்றவன்; அநாதை; ஒண்டிக் கட்டை; அட பாவமே! இப்படியுமா பிறப்பு?

உன் அருள் பெற்றோர்க்கு, அருட் செல்வர் என்று பெயர் உண்டு. "செல்வ மென்பது சிந்தையின் நிறைவு."

நிறைவு மனம் இல்லாத அதுவே மிடி. அம் மிடி, கல்விச் செல்வர், பொருட் செல்வர் இருவரிடத்தும் கூடக் காணலாம்.

அந்த மிடியால், பிராந்தி ஞானம் பிறக்கிறது. பிரபோ! மிடி யால் மயக்கம் உறுவேனோ?

அருள் இலதேல், மருள் வருதல் இயற்கை யல்லவா!

(1) ஏரகப் பெருமா! எளியேன் வேண்டுதல் என் எனில், சௌக்கியமாக இருக்கச் செய்! அருட்கு அயலான சௌக்ய சூழ் நிலை, இக போகத்தில் இழியச் செய்யும். ஆதலின், 'மிக்க கன மதுறு நீள் சௌக்கியம்' உதவியருள்!

இது உண்டு; அது இல்லை யெனுதபடி, (பொருட் பேறு, கல்விப் பயன்; கேள்வி நலம்; அறிவு வளம்; ஒழுக்கத் துறை; அமைதி யெனும்) சகல செல்வமும் உதவியருள்!

---

ஏதுக்கும் நீதுணையாம் என்றிருக்கும் என்னை
சாதுக்கள் சார்பளித்துச் சார் நீ சதாசிவமே

அதன்பின், உன்னில் ஒன்றியிருக்கும் யோகத்தை உதவியருள்!

சோடச கலானுபவம்; பீடுடைய அதனால் பெருகிவரும் பெருவாழ்வை உதவியருள்!

வெறும் எட்டு ஞானம் அல்லாத, உயர்ந்த சிவஞானத்தால் விளையும் சாலோக சாமீப சாரூப பதமுத்தியை உதவியருள்!

இவைகளை முறையே உதவிய பின், அதன் இறுதியில் இன்ப மார்ந்திருக்க, பரமுத்தி எனும் சிவசாயுஜ்யம் உதவியருள் என்று பிரார்த்தித்தபடி,

(1) சடன், (2) கசடன்; (3) மூடன்; (4) மட்டி; (5) தமியன்; (6) மிடியன் எனும் ஆறு நிலையுடைய அடியேன்,

(1) சரணம் குமரேசனே! (2) சரணம் கடப்பமலர் அணிவோனே! (3) சரணம் வடிவேலா! (4) சரணம் மயில் வீரா! (5) சரணம் அழகா! (6) சரணம் முருகோனே' என்று ஆறு பெயர் சொல்லி, கூவி அழைக்கின்றேன்!

அடியேற்கு, (1) சௌக்யம்; (2) சகல செல்வம்; (3) யோகம், (4) பெருவாழ்வு; (5) சிவஞானமுத்தி; (6) பரகதி எனும் ஆறையும் உதவியருள் என்று வேண்டும் மங்கலமான இத் திருப்புகழை, நாள்தோறும் பாடி மகிழ்ந்தவரே பாக்கியசாலிகள்!

வாழ்க திருப்புகழ் அடியவர்!

---

# உண்ணுமல் நோய் தீர்க்கும் ஒரு தனி மருந்து

(வா. ராமலிங்கம்)

உலகில் பிறப்பிலும் மேலாய மனிதப் பிறப்பைப் பெற்ற நமக்கு எய்தும் நோய் இரண்டு. ஒன்று உடலைப் பற்றி நின்று உலைவு செய்து வருத்துவது. மற்றொன்று நிற்கும் உயிரைப் பிரிப்பதும் மீண்டும் பிறக்கச் செய்வதுமாம்.

எந்த நோய்க்கும் மருந்து வேண்டுவது அவசியம். மருந்தும் வைத்தியர் குறித்த முறைப்பட உண்டு தான் நோய் நீங்கப் பெறவேண்டும். வைத்தியரும் நோய்

---

தாபம் பெருகியுளம் சஞ்சலம்சா ராமல்
பாபம் கழலக்கண் பாராய் சதாசிவமே

கொண்டார்பால் கருணைகொண்டு உரிய மருந்தை கடப்பாட்டில் கொடுத்து உதவவேண்டும். உண்போரும் அதன் பண்புணர்ந்த வைத்தியர் உரையில் திண்ணிய பற்றுடன் உண்டே நோய்தீர வேண்டும். வைத்தியர் உண்ணக் கொடுக்கும் மருந்தில் சில உருசி உள்ளனவாகவும், சில உவர்ப்பும் கசப்பும் உள்ளனவாகவும் இருக்கும். அவை உற்ற நோயின் தன்மை நாடி உதவப் பெறுவன. எனவே, மருந்தின் உவர்ப்பு கசப்பால் உண்ணுது ஒதுக்கின், உற்ற நோய் நீக்கம் எய்துதல் கஷ்டமாம். இவை உடல் நோய் நீக்கப் பற்றியன.

உயிர் நீக்கி மீண்டு உறச் செய்யும் பிறவி நோய் தீர்க்கவும் மருந்துண்டு. அது உணர்வால் பெற்று உள்ளத்தே பொருத்தி அருத்தியால் எய்தும் அருளாகிய மருந்து. இம்மருந்தை இனிது பெறுதற்கு எளிதான முறையை பண்டு கண்டுணர்ந்து பழகிய பெருமக்கள், நமக்கு வகுத்துணர்த்தி வழங்கியுள்ளனர். அது தன்னைப்பற்ற தனிமருந்து. உடல் நோய் பிறவி நோய் ஆகிய இரண்டையும் ஒருங்கே தீர்க்கும் உயர்வு பொருந்தியது.

அது எது எனில் திருவைந்தெழுத்தாம் சிவநாமம். இதனை உணர்வினுல் உளமகிழ்ந்து உருகி ஓதினுல், இருவினையும் வருவினையும் நீக்கி இன்பம் தரும் என்பது திண்ணம்.

"இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்த வத்தரும் அஞ்செழுத் தோதினுல்
பொருந்து நோய்பிணி போகத்து றப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே"
மருந்து வானவர் உய்யநஞ் சுண்டுகந்
திருந்த வின்கழிப் பாலையுள் எம்பிரான்

(அப்பர் சுவாமிகள்)

---

ஒருநினைவால் நின்னை உணராதே யெங்கும்
திரியுமனம் தேறச்செய் தேவே சதாசிவமே

"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்ருன்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து (என்பது திருவாசகம்)

எனவே அஞ்செழுத்தாகிய இம்மருந்து அருந்த வேண்டாத அருமருந்து. வாயினல் உச்சரித்த அளவிலேயே உய்தி தரும் மருந்து.

"வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே—தூயவே
கம்பெருமா தேவியொடு காளத்தி வீற்றிருந்த
எம்பெருமா னோஞ் செழுத்து" என்ருர் நக்கிரர்.

எனவே உவர்ப்பு கசப்பின்றியும், உண்ணுதே உற்ற நோய் முற்றும் தீர்க்கும் ஒரு தனி மருந்தாயுள்ள அஞ்செழுத்தை, இடையருது ஓதி உரைக்கும் பண்பிற் பயின்று உற்ற நோய் நீங்கப் பெறுவோமாக.

---

## ஸ்ரீ திருப்புகழ் மணிக்குப் பாராட்டு

சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டத்தின் உயிர் நாடியாக, ஒன்பது ஆண்டுகளாகச் சிறந்த அருள் தொண்டாற்றி வருகிற நமது திருப்புகழ் மணி என்று யாவருக்கும் தெரிந்த திருவாளர். டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள், உயர் நீதி மன்றத்தில் ஐம்பது ஆண்டுகளாக மெச்சத் தக்க முறையில் வழக்கறிஞராகச் சேவை புரிந்ததை, நீதி மன்றம் சமீபத்தில் பாராட்டியது. இது அடியார் யாவருக்கும் மகிழ்ச்சிதரத் தக்கதே.

திறம்படத் தொழில் நடத்திய திருப்புகழ் மணி அவர்கள், மெய், வாய், மனத்தின் பண்பாகிய மெய்ம்மை, வாய்மை, உண்மைகளையும் தன் தொழிலில் பெற்ற திறத்தால் கடினமான அரிய அனுபவதத்துவங்களையும் தெளிவாக அலசி யாவருக்கும் எளிதில் புரியும் வண்ணம் விளங்கச் செய்து வருகிருர்கள். எண்ணுவதும், செய்வதும், பேசுவதும் சதா இறைசம்பந்தமாகவே தன்னுடைய நாட்களைப் பயன் படுத்தி, அடியார்களுடன் வாழும் திருப்புகழ் மணி அவர்கள், நீடுழி வாழ வழுத்துகின்றனம்.

# GRATITUDE

The world consists of innumerable parts and the wonder of it is that the parts which are so contrarient to the eye, are still knit together by an unknown cosmic chord. All parts are attracted to the earth. Voluntary or involuntary submission to this attraction generates the idea of being drawn down even as the release from it gives the idea of going above. The attraction of part to part and the attraction of the parts to the whole constitute the integrity of creation.

Even so in the metaphysical sphere, love is the force of agreeable consistency between life and life on the one hand and between life and the All-Life on the other. Gratitude is the expression of the individual life in response to the touch of love from another life or from the All-Life.

The Bakta who is in constant loving touch with god, carries the weight of two burdens, that is, the weight of the Lord's grace, and the responding weight of inescapable gratitude. The Siddhars, the Nayanmars and the Alvars and others have groaned in moving song about the flood of His mercy and the unrequitable feeling of gratitnde to the Lord. The small loving thoughts of the Lord opens the sluice gates of the flood of His Grace, and he is really unfortunate who has not learnt the art of trading with the Lord in terms of love and grace. But, if this

trading is entirely free of the spirit of bargain, the results *will be happier still*.

This explains how the saints have glorified the Lord and how the Lord has glorified the *Bakta*. This is beautifully brought out in the 'Pilla Thamizh' (பிள்ளைத் தமிழ்) of Tiruchendur.

> "பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை
> ஒழித்துப் பெருவாழ்வும்
> பேறும்கொடுக்க வரும்பிள்ளைப் பெருமான்
> என்னும் பேரானா!"

The heart of the Bhakta is the abode of God. The glory of the Lord within is reflected completely in the Bhakta in his relations with the world.

May the Lord's will be done and may the Bhakta prosper. May the World also prosper in contentment, plenty and peace.

*Thiruppugal mani.*

மனமின்றி நினைவுண்டோ மறதி யுண்டோ
வாயின்றிப் பேச்சுண்டோ வாதம் உண்டோ
கனமின்றி மழையுண்டோ குளிர்ச்சி யுண்டோ
காடுண்டோ நாடுண்டோ, பயிர்தானுண்டோ
அனையின்றிச் சிசுவுண்டோ சுற்றமுண்டோ
அருளின்றிச் செயலுண்டோ பொருளும் உண்டோ
உனையின்றி யானுண்டோ என்னை யாளாய்
உமையொருகூ றுடையானே உம்பர் கோவே.

18582

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 வைகாசி—அமிர்தவசனி)

-104-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் | (அச்சில்) | | |
| சிவநேயச் செல்வர்கள் | ,, | | |
| கணபதி பக்தர்கள் | ,, | | |
| முருகனடியார் | ,, | | |

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, [illegible]